# தென்மொழி

## தமிழர்க்கு விடிவுண்டு!

பார்ப்பனர் நால்வர் சேர்ந்தால்
    பகை, பூசல், பொருமை மற்றும்
ஆர்ப்பரிப் பெதுவு மின்றி,
    அவிரின வேர்க்குள் நீரை
வார்ப்பதெப் படி? என் னென்ன
    வழிவகை? தமிழி னத்தைத்
தூர்ப்பதெப் படி?–என் றெல்லாம்
    எண்ணுவார்; துணையும் காண்பார்!

அந்தோ! இவ் வுலகில் உள்ள
    அனைவர்க்கும் மூத்த தாம் நம்
செந்தமிழ் இனத்தில் நால்வர்
    சேர்ந்திடில், தமக்குள் தாமே
கொந்துதல், குடைதல், குத்தல்,
    குழிபறித் திடுதல்,–எல்லாம்
சந்தையில் நடப்ப தைப்போல்
    சடுதியில் நடந்து போகும்!

ஒருவனை ஒருவன் ஏய்ப்பான்;
    ஒருவனை ஒருவன் சாய்ப்பான்;
உருவாகித் திரளும் போழ்தில்
    ஒருவனை ஒருவன் மாய்ப்பான்!
குருவினை முதுகில் குத்தி
    மாணவன் குடைந்து பார்ப்பான்!
எருவெனப் பயனு கின்ற
    ஒருவனை இணைந்தெ திர்ப்பான்!

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)



கவடி: 11
ஓலை: 2

விலை
75 காசு

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

# நமக்கு வந்த மடல்கள்.

**0: 376:** இங்கு எனது உடல்நிலை கடிதம்கூட எழுதமுடியாத அளவிற்குப் படுக்கையிலேயே இருக்கும் ஓர் இரங்கத்தக்க நிலையில் உள்ளது, எந்த வகையான துணையும் இல்லாத நிலையில் தங்களுடைய பேராதரவை எதிர்பார்த்து இதனை எழுதுகின்றேன். தென்மொழி வாயிலாக எனக்கு உதவி கிடைக்கத் தங்களின் பெருந்துணையை நாடுகின்றேன். நட்டாற்றில் நிற்கும் என்னைக் காப்பாற்றும் பொறுப்பினைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன். தங்களின் முயற்சி, ஒத்துழைப்புத்தாம் கைகொடுத்து என்னைக் காப்பாற்ற வேண்டும். என்னிலை உணர்ந்த தங்களுக்கு விரிவாக எதுவும் எழுத வேண்டாம் என்று இத்துடன் முடிக்கிறேன்.

—இங்ஙனம், நன்றிமறவாத ஈழத்து அடிகள்
56-அண்ணா தெரு காஞ்சிபுரம்-3.

(ஆசிரியர் குறிப்பு: இதுபோலும் பல மடல்கள் இந்தி யெதிர்ப்பு மறவர் ஈழத்து அடிகளிடமிருந்து தென்மொழிக்கு வந்த வண்ணமாகவே இருக்கின்றன. தென்மொழி வாயிலாக ஓர் இரண்டாயிர உருபா அளவில் நன்கொடையினை அன்பர்கள் அடிகளுக்கு விடுத்துதவினார்கள். இன்னும் மூவாயிர உருபா கடனுடன் அவர் கடுமையான நோயுற்றுத் துன்புற்று வருகின்றார்கள். தன்னையே பேணிக்கொள்ளத் தெரியாத தென்மொழி அவர்க்கு என்ன செய்துவிட முடியும்....? உண்மையான நாட்டுத் தொண்டர் இப்படித்தான் நம் நாட்டில் துன்புற வேண்டியுள்ளது. இந்தி யெதிர்ப்புக்காகப் பலமுறை பலவாண்டுகளைச் சிறையிலேயே கழித்த அடிகளுக்கு அரசு ஓய்வுதியமாகிலும் கொடுத்துக் காக்கலாம். ஆனால் அவர் உண்மையானவராயிற்றே! உண்மையானவர்க்கு அரசு உதவி எப்படிக் கிடைக்கும்....? — பெருஞ்சித்திரன்.)

**0: 377:** நீங்கள் தமிழுக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் பாடுபட்டுச் சிறை சென்றதைப் படித்துத் துயருற்றேன். உங்களைப் போல் ஆயிரம் பெருஞ்சித்திரர்களும், ஈ. வே. இரா. வைப்போல் ஆயிரம் ஈ. வே. இராக்களும் தோன்றினாலும் தமிழர் விழித்தெழு வார்களா என்பது ஐயமே! ஒருதனித் தமிழ் வீரராய் நின்று போரிடும் உங்களுக்கு, உடலுறுதியும் உள்ளத்திலுறுதியும் அளிக்கும்படி திருவருளை வழுத்துகின்றேன்.

—பேரா. சாமுவேல் ஆபிரகாம். க. மு; அறி. மு; மதுரை.-22

**0: 378:** சென்ற தென்மொழி இதழில், அன்பர்களுக்குத் தாங்கள் விடுத்துள்ள அறிக்கை மிகத் தேவையானதும் இன்றியமையாததுமாகும். பல்வகைக் காழ்ப்புணர்வுகளாலும், மனம்பொருத தன்மையினாலும் வெந்து புழுங்கிக் கிடக்கின்ற நம் அன்பர் சிலருக்கு இவ்வகையான வெற்றாரவாரச் சொற்கள் மேலும் வெம்மையையும் புழுக்கத்தையுமே தோற்றுவிக்கும். நடுநிலை மாந்தன் ஒருவனைப்பார்த்து, “அறிஞன், தென்னாட்டின் சன்-யாட்-சென், இந்நாட்டின் உருசோ” என்றெல்லாம் புகழ்மாரி பொழிந்து கொண்டே இருந்தாலும் அவன் அப்படி ஆகிவிடப் போவதில்லை. அறிஞன் ஒருவனைப்பார்த்து “முட்டாள், மடயன், புரட்டன், பித்தன், ஏமாற்றுக்காரன்” என்று பலவாறு திட்டினாலும் அவன் இப்படியும்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

தமிழின இளைஞர் கூட்டம்—
(தப்பில்லை நானு ரைத்தால்)
உமியினம்! பயனே யின்றி
ஊர்சுற்றும்; தெருக்கள் சுற்றும்!
திமிலெனத் தோற்றம்! ஆனால்
தெம்பில்லை; ஊற்ற மில்லை!
இமியள வேனும் நம்மின்
இனம்பற்றிக் கவலை யில்லை!

தூக்கிய கழுத்துப் பட்டை!
துவளாத சட்டை! காலைப்
போக்கிய இறுகல் காற்பை!
இடுப்பெலும் துடைப்பக் குச்சி!
(தாக்கிய சொற்கள் அல்ல;
தாங்கொணாத் துயரத் தாலே—
ஊக்கிடும் நோக்கத் தோடே—
உலராத கண்ணீர்ச் சொற்கள்)

அடடா! எம் இளைஞர்க் கந்நாள்
ஆற்றலும் துணிவும் மீண்டால்...!
இடமென்ன, காலமென்ன,
எந்தமிழ் இனத்தை மீட்க?
தடமார்பு! குன்றத் தோள்கள்!
தழல்விழி! அரிமாச் சீற்றம்!
முடமாகும் ஆரி யங்கள்!
முண்டமாய்ச் சரிந்து போகும்!

நேற்றில்லை; என்றோ சாய்ந்த
வரலாறு நிமிர்ந்து நிற்கும்!
கூற்றில்லை; மந்திரச் சொல்!
குலைவுற்ற தமிழர் நெஞ்சில்
காற்றில்லை; கனப்பு மில்லை!
ஆதலால் காய்ப்பு மில்லை!
ஏற்றதோர் பொழுது நேரும்;
இந்தியா மூளி யாகும்!

அழலுண்டு தமிழர் நெஞ்சில்!
அஃதோர்நாள் கனத்த லுண்டு!
எழலுண்டு, தமிழர் கூட்டம்!
இருநூறு நூற்றாண் டாக—
நிழலுண்டு, பழம்பால் உண்டு,
நெய்யுண்ட 'மிலேச்சர்' கூட்டம்
விழலுண்டு! தமிழர்க் கந்நாள்
விடிவுண்டு; விளைவும் உண்டே!




# தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி: 11 ஓலை: 2

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

கன்னி-துலை தி. பி. உ00௪ (செப்-அக்-1973)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.


# ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-5



*எந்தத் துறையில் ஈடுபட்டாலும் சரி, பார்ப்பனர்க்குத் தமிழ்மேல் ஒரு வெறுப்புணர்ச்சியும், தமிழர்மேல் ஒரு பகையுணர்ச்சியும் கட்டாயம் இருந்தே வருவதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. மாந்தன் நிலாக்கோளுக்கும் செவ்வாய்க் கோளுக்கும் சென்று கொண்டிருக்கின்ற இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் கூட, அவர்கள் அத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டிருக்கின்றார்களென்றால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்களின் போக்கு தமிழ்க்குமுகாயத்திற்கே எப்படி மாறுபட்டு இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவும் முடியாது.*

தமிழ்த்துறையில் அவர்களின் கைவரிசை மறைமுகமாகவே காட்டப்பெற்றது. தமிழை வளர்ப்பது போலும் தமிழ்மேல் பற்றுக் கொண்டிருப்பது போலும் அவர்கள் வெளிப்படையாக ஈடுபட்டாலும், மறைமுகமாக அவர்கள் இனத்துக்கும் மொழிக்குமே ஏற்றந் தந்து எழுதியிருக்கின்றனர்; பாடி யிருக்கின்றனர். அந்நிலையில் பெரும் புலவர்களாக விளங்கிய் பர். உ. வே. சாமிநாதர் அவர்களையும் பரிதிமாற்கலைஞர் அவர்களையும் ஒரு சில எடுத்துக் காட்டுகளால் பார்த்தோம். அவற்றிலிருந்து அவர்களின் உள்ளக் கிடக்கைகள் எவ்வாறு தமிழ்க்கும் தமிழர்க்கும் மாறுபட்டு விளங்கியிருந்தன என்பது காட்டப்பெற்றது.

இனி, பாட்டுத்துறையில் பாரதியார் ஒரு பார்ப்பனர் என்பதற் காகவே எப்படி அளவிறந்து போற்றப் பெறுகிறார் என்பதையும் கொஞ்சம் சொல்லித்தான் ஆகல் வேண்டும். அவர் பாட்டுத்திறமை மிகவும் பொதுவானதே. அவருக்கிருந்த கற்பனையாற்றலை வேண்டு மானால் ஒருவாறு சிறப்பாகச் சொல்லலாம். ஆனால் கற்பனையாற்றல் இருப்பவர்களெல்லாரும் பாத்திறன் பெற்றிருப்பார்களென்று சொல்ல முடியாது. பாவலன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய திறமையுள் கற்பனைத்திறனும் ஒன்று. ஆனால் பாத்திறன் என்பது ஒருவன் கற்றுள்ள இலக்கிய நூல்களையும், அவனுக்குள்ள மொழிப் பயிற்சியையும், சொல்லாற்றலையும், இயற்கையீடுபாட்டையும் உலகியலறிவையும், மெய்யுணர்ச்சியையும் பொறுத்து அமைவது. கற்பனைத்திறன் பொதுவாக எல்லாரிடத்தும் இருக்கும். மொழிப் பயிற்சியோ, சொல்லாற்றலோ, உலகியலறிவோ, மெய்யுணர்ச்சியோ இலக்கியப் பயிற்சியோ எல்லாரிடமும் இருக்கும் என்று சொல்ல முடியாது. அவை பயிற்சியினாலும், கல்வியினாலுமே கைவருவன வாகும். இயற்கை யீடுபாடோ சூழலால் அமைவதாகும்.

பாரதியாரிடம் கற்பனையாற்றலும் அதை வெளிப்படுத்தும் உணர்ச்சியும் ஓரளவு இருந்தன என்று சொல்லலாமே தவிர, மொழிப் பயிற்சியும், சொல்லாற்றலும், இலக்கியப் பயிற்சியும் அவ்வளவு மிகுந்திருந்தனவாகச் சொல்ல முடியாது. உலகியலறிவும், மெய் யுணர்ச்சியும் அவ்வளவு சிறப்புற விளங்கியிருந்தன என்றும் பாராட்ட முடியாது. இயற்கை யீடுபாடும் ஓரளவே இருந்தது. ஆனால் அவர் கம்பனுக்கும் மேல், இளங்கோவுக்கும் மேல் பாராட்டப் பெறுவதன் நோக்கமெல்லாம், அவர் ஒரு பார்ப்பனர் என்பதைத் தவிர வேறு இருக்க முடியாது. பாட்டுத்திறத்தில் பாரதிதாசன் அவரைப் பலவகையிலும் வென்றிருக்கின்றார். ஆனால் அவர் ஒரு

தமிழர் அதுவும் தன்மான எழுச்சியுள்ள தனித்தமிழர் என்பதற்காகவே ஆரியப் பார்ப்பனராலும், நம் வீடணத் தமிழர்களாலும் அழுத்தி வைக்கப் பெற்றுள்ளார். தமிழ் இலக்கிய வுலகில் கம்பனைப்போல் கற்பனை வளம் படைத்தவர்களைக் காண முடியாது. இளங்கோ போல் மொழிவளம் மிக்கவர்களும் அருமையே. ஆனால் கம்பனுக்கு விழா எடுப்பது போல் பாரதியாருக்கும் விழா எடுப்பது, போட்டி போட்டுக் கொண்டு செய்யும் ஓர் இன எழுச்சி ஈடுபாடே யொழிய, இலக்கியச் சிறப்பான ஒரு செயலன்று. தேசியப் பாவலர் என்பதில் வேறு ஆரியச் சூழ்ச்சி புதைந்து கிடக்கிறது. கம்பனுக்கு விழா எடுப்பதிலும் கூட ஆரியப் பார்ப்பனர்க்கே மிகுந்த அக்கறையுண்டு என்பதும் இன்னொரு வேடிக்கை. அவன் இராமாயணத்தை எழுதினான் என்பதே அவன் பாராட்டப் பெறுவதற்குத் தலையாய ஒரு காரணியம். ஏனெனில் இராமாயணத்தில்தான் வேறு எந்த நூலிலும் விட தமிழர் இழிவு செய்யப் பெற்றுள்ளனர். அதனால் பார்ப்பனர்க்கு அதில் ஈடுபாடு மிகுதி. அதற்காகவே கம்பனும், ஒரு பார்ப்பனர் என்பதற்காகவே பாரதியாரும் பாராட்டப்பெறுகின்றனர். பார்ப்பான் ஒரு துறையில் உள்ள ஒருவனைப் பாராட்ட வேண்டுமானால் முதலில் அவன் பார்ப்பானாக இருத்தல் வேண்டும்; அல்லது அவன் ஒரு பார்ப்பன அடிமையாகவேனும் இருத்தல் வேண்டும். இவ்விரண்டு தகுதியும் ஒருவனிடம் இல்லையானால் அவன் பனைமர உயரத்தவன் என்றாலும் குட்டையன் என்பான், பரந்தமுடித் தலையன் ஆனாலும் மொட்டையன் என்பான்.

பாரதியாரின் பாட்டு ஆராய்ச்சியைப் பிறிதொருகால் பார்ப்போம். இக்கால் அவர் தமிழைப்பற்றி மிகப் சிறப்பாகப் பாடியிருக்கின்றார்; தமிழ்மொழிக்கு மிகப் பெருமை சேர்த்திருக்கின்றார் என்று தமிழர்களை பாராட்டுகின்றனரே; அந்தப் பாராட்டில் எந்த அளவு உண்மை உள்ளது என்பதை மட்டும் பார்ப்போம். அவர் தமிழ் உரை நடை இது:

''ஸூர்யோதயத்திலேயும் ஸூர்யாஸ்தமயத்திலும் வானத்தில் நடக்கும் இந்திரஜாலக் காட்சியில் க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமே யன்றி இன்னுமொரு விசேஷமுண்டு''

—பாஞ்சாலி சபத விளக்கக் குறிப்புகள்.

இவ்வாறான ஒரு நடையைப் பாரதியார் எழுதினால் என்ன? யார் எழுதினால் என்ன? இதனால் தமிழ்மொழிக்கு ஆக்கம் ஏற்படும் என்று எவராவது சொல்ல முடியுமா? தம் வடமொழி கலந்த நடை, 'நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும்'-என்று வேறு பாராதியார் குறிப்பிடுகிறார். அவர் கண்ணோட்டத்தில் இவ்விந்திய நாடும்

இங்குள்ள மக்களும் எவ்வாறு பட்டிருக்கின்றுர்கள் என்பதைக் கீழ்வரும் உரையால் அறியலாம்.

பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவருது நடத்தியிருப்பார்களாஞல் மற்றக் குலத்தவரும் நெறி தவறி யிருக்கமாட்டார்கள்... ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகள்''
—பாஞ்சாலி சபத விளக்கக் குறிப்புகள்.

மேலே காட்டப்பெற்ற இரு குறிப்புகளே பாரதியார் தமிழ் மொழியைப் பற்றியும் தமிழ் இனத்தைப் பற்றியும் என்ன கருத்துக் கொண்டிருந்திருக்கின்ருர் என்பதைத் தெளிவாகக் காட்டப் போதுமான சான்றுகளாகும். 'ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும் ஆரியப் பார்ப்பனர்கள்தாம் பொறுப்பாளிகள்' என்ருல் மானமுள்ள எந்தத் தமிழன் அவரை வெறும் 'பாட்டுத் திறனுக்'காகவோ, கற்பனைத் திறனுக்காகவோ பாராட்டுவான்? தன் மொழியைப் பற்றியும் இனத்தைப் பற்றியும் நாட்டைப் பற்றியும், அவை யழிக்கப் பெற்ற வரலாறு பற்றியும், அவை புதுப்பிக்கப் பெற வேண்டிய முயற்சி பற்றியும் சிறிதும் கவலை கொள்ளாத ஆரிய அடிமைகளே அவரை ஒரு பாவலர் என்பதற்காகப் பாராட்டுவார்கள். வெறும் பாவலர் என்பதற்காகப் பாராட்டுப் பெற வேண்டியவர்கள் நம் இனத்தில் ஏராளம்! தடுக்கி விழுந்ததற்கெல்லாம் பாட்டு உண்டு இங்கே! தமிழ் இலக்கியங்களில் உள்ள பாட்டுச் செறிவு போல் வேறு இந்திய மொழிகள் எவற்றிலும் அன்றும் இல்லை; இன்றும் இல்லை. பாவலர்களுக்குப் பஞ்சம் என்றும் இருந்ததில்லை: எனவே அதற்காகப் பாரதியாரைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாட வேண்டிய தேவையும் நமக்கு இல்லை. பாவலன் ஒருவனுல் எதிர்காலத்திற்குக் கிடைத்த கருத்துகள் எவை? அவற்ருல் அந்த மொழிக்கும், மக்களுக்கும், அந்நாட்டுக்கும் வந்து சேரும் பயன்கள் எவை?– என்பனபற்றித்தான் நாம் கவலைப் பட வேண்டுமே தவிர ஒருவர் ஒரு பாவலர் என்பதால் மட்டுமே நமக்குப் பெருமை வந்துவிடப் போவதில்லை. பாரதியாரின் உள்ளம் ஆரியர்க்காக எண்ணிய உள்ளம்; அவர் இந்த நாட்டை ஆரியநாடு என்பதனுலேயே பெருமை கொள்வதாக அவர் பாடல்கள் தெரிவிக்கின்றன. பின்வரும் பாடலடிகளைப் பாருங்கள்:

" பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறுகும்
ஆரிய நாடு என்று அறி"

" முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்?-எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்"

" சித்த மயம் இவ் வுலகம்; உறுதிநம்
சித்தத்தில் ஓங்கி விட்டால்-துன்பம்
அத்தனை யும்வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல்"

—"எம்மை
ஆண்டருள் செய்பவள் பெற்று வளர்ப்பவள்
ஆரிய தேவி"

" வீரிய வடிவம்-என்ன
வீரிய வடிவம்-இந்த
ஆரியன் நெஞ்சம், அயர்ந்ததென் விந்தை!"

" எங்கள் ஆரியப் பூமி"

" ஆரிய பூமியில் நாரிய ரும்நர
சூரிய ரும்சொலும் வீரிய வாசகம்"

" உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கில்லை ஈடே"

" ஆதிமறை தோன்றியதால் ஆரியநா டெந்நாளும்
நீதிமறை வின்றி நிலைத்த திருநாடு"

—எப்படி? பாரதியாருக்கு இது தமிழ் நாடாகவோ இந்தியா வாகவோ படவில்லை. அப்படிப் பட்டாலும் அவருக்குச் சொல்ல விருப்பமில்லை. இந்திய நாடு அனைத்தையும் பாரதநாடு என்று சொல் வதைவிட ஆரிய நாடு என்று சொல்வதில்தான் அவர்க்குப் பெருமை யிருந்திருக்கின்றது. உண்மை அப்படியிருந்து அவ்வாறு அவர் சொல்லிப் பெருமைப் பட்டிருந்தாலும் தாழ்வில்லை. 'அவர் உண்மையைத்தானே சொன்னார்; அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்' என்று கேட்கலாம். அவர் உண்மையல்லாத ஒன்றை உண்மை போல் பலமுறை பன்னிப் பன்னிப் பேசியிருக்கின்றார். இப்படிப் பாடல்களைப் பாடுவதாலும், பலமுறை சொல்லுவதாலும் வரலாற்று உண்மைகளையே மறைக்க முயற்சி செய்துள்ளார். நாடற்ற ஆரியர்களுக்கு இந்நாடு உரிமையுடையது என்றால் இந் நாட்டையே பிறந்தகமாகக் கொண்ட தமிழர்களுக்கு எந்த நாடு உரிமையுடையது? தமிழ்நாடு என்பதாகவே ஒரு நாடு இருப்பதாக அவர் நினைவு கொள்ளவில்லை. இந்திய நாட்டில் அடங்கிய

பத்தொன்பது திரவிட நாட்டுப் பகுதிகளும் ஆரியர்களுடையனவே என்று வல்லடி வழக்கு நடத்தியிருக்கின்றார்.

'ஆரியர்' என்பது ஒரு பெருமைக்காகச் சொல்லப் பெற்றதாகத் தெரியவில்லை. இந்திய நாட்டின் ஒற்றுமையைக் கருத்தில்கொண்டு இந்தியா முழுமைக்கும் ஒரு பெயர் சொல்ல வேண்டுமே என்றுங்கூட அந்தப் பெயரைச் சொன்னதாகத் தெரியவில்லை. உண்மையிலேயே அவர் தம் இனப்பெருமையை நிலை நாட்டவே அவ்வாறு சொல்லி யிருக்கின்றார். இன்னொருவர்க்குச் சொந்தமான ஒரு வீட்டை, அல்லது பொதுவான ஒரு சாவடியை ஒருவன் தன் வீடு என்று சொன்னாலும் தாழ்வில்லை; தன் இனத்தாருடைய வீடு என்று சொல்வானானால் அவன் தன் இனத்தார்க்கு அதன் பெருமை அனைத்தும் வந்து சேரவேண்டும் என்று நினைக்கின்றவனா இல்லையா? இதை எவரேனும் மறுக்க முடியுமா? இந்நாட்டை ஆரிய நாடாகக் கருதியதை, அவர் பொதுநோக்கங் கொண்டு சொன்னது என்பது, பித்தலாட்டமும் புரட்டுமாகும். வருங்காலத் தமிழ்க் குமுகாயத்தை இனி இவ்வாறெல்லாம் ஏமாற்ற முடியாது. மேலும் அவர் கூறுவதைக் கவனியுங்கள்:

"ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!"

"வீரியம் ஒழிந்து மேன்மையும் ஒழிந்து, நம்
ஆரியர் புலையருக் கடிமைகள் ஆயினர்"

"பிச்சைவாழ் வுகந்து பிறருடை ஆட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரியன் அல்லன்"

"மாட்சிதீர் மிலேச்சர் மனப்படி யாளும்
ஆட்சியில் அடங்குவோன் ஆரியன் அல்லன்" [தொடரும்]

## தென்மொழி அன்பர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள்.

அருந்தமிழன்பரீர்!

வணக்கம். அடியேன் திருமணம் வரும் 12—12—1973, அறிவன் (புதன்) கிழமையன்று காலை 9-30-மணி முதல் 10-30-மணிக்குள், கோவை-18, "திரு. இராமகிருட்டிண கலியாண மண்டப"த்தில் நடைபெறும். அதற்கான முறையான அழைப்பு அடுத்த **தென்மொழியில்** வெளிவரும். அதனையே அன்பரீர் ஒவ்வொருவரும் தமக்கு விடுத்த தனிச்சிறப்பழைப்பென ஏன்று, திருமணத்திற்கு வந்திருந்து சிறப்பிக்க வேண்டுமென அன்பின் உரிமையால் வற்புறுத்து வேண்டி யமைகின்றேன். அன்பு,

**மறை. நித்தலின்பன்,**
39,-"மறைமலையடிகள் மனை"-கோவை-12

தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக்
கருத்தரங்குச் சொற்பொழிவுகள்: (தொடர்ச்சி)

# குமரிநாட்டு வரலாறு உண்மை!

## 0 உண்மையை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்!

## 0 வண்ணனை மொழியாராய்ச்சியாளர் செய்யும் தவறு, வரலாற்றை அடிப்படையாகக் கொள்ளாததுதான்.

0 **பழம் பொருட்களைச் சான்றுகளை மட்டும் வைத்து ஓரினத்தின் பழமையை உணர முடியாது.**

0 'பிராமணர் தமிழரை ஏமாற்றி விட்டனர்' என்று பரிதிமாற்கலைஞரே சொல்லி யிருக்கின்றார்.

0 மேனாட்டாருக்குக் குமரிநாட்டு வரலாற்றை அறி வதற்கு ஒரு பெருந்தடையாக விருப்பது பைபிளில் சொல்லப் பெற்ற ஏதேன்தோட்டத்துக்கதைதான்!

0 மேனாட்டார் சமசுக்கிருதத்தைத் தமக்கு இனமான ஒருமொழியென்றும், பிராமணரைத் தம்முடைய இனத்தவர் என்றும் கருதுவதால், தமிழர் பெருமையை அவர்கள் ஒப்புவதில்லை.

0 மேலுள்ளவர்களுக்கு மாறாகப் போய் விடுமோ, ஓர் இனத்தாருடைய பகையைத் தேடிக் கொள்ளும்படி நேர்ந்து விடுமோ, மேலும் மேலும் நம் பதவி உயர வேண்டுமே, பணம் தொகுக்க வேண்டுமே— என் றெல்லாம் கருதும் ஒருவன் உண்மையான ஆராய்ச்சியாளனாக விருக்க முடியாது.

0 வெளிநாட்டு அறிஞர்கள் தமிழரைப்போல் தமிழை ஆழமாக ஆராயமுடியாது. ஏனெனில் தமிழ் மிக மிகப் பழமையான மொழி!

0 **தஞ்சைக் கருத்தரங்கில் மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் ஆணித்தரமான உரைகள்!**

அவைத்தலைவர் அவர்காள்! புதுப்புனைவர் கோ. து. நாய்க்கர் அவர்காள்! பேராசிரியர்காள்!

இங்குக் கூட்டப் பெறும் இக்கருத்தரங்கு உலகத் தமிழ்க் கழகத்தின் சார்பில் கூட்டப் பெறுகின்றது. இதற்குப் பேராசிரியர்கள் பலரையும் அழைத்திருந்தோம். ஆனால் மிகவும் பொறுப்பு வாய்ந்த–தமிழின்பால் அக்கறை கொண்ட பேராசிரியர்கள் சிலர்தாம் இங்கு வந்திருக்கின்றனர். இக்கருத்தரங்கு தமிழன் பிறந்தகத்தைத் தீர்மானிக்கும் கருத்தரங்கு ஆகும். ஆரியர்கள் இந்த நாட்டுக்கு வருதற்கு முன்பே இந்நாவலந்தீவு முழுவதும் பரவியிருந்தவர்கள் பழந்திராவிடர்கள் என்று தான் எல்லா நடுநிலையாளர்களும் சொல்லி வருகின்றார்கள். அவர்களையும் கூட இக்காலத்தில் சிலர் மறுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

நான் மொழித்துறையில் மட்டும், மறைமலையடிகள் இல்லாத இக்காலத்திலே, இவ்வுலகத் தமிழ்க்கழகத்தை ஆற்றுப்படுத்தி வருகின்றேன். மறைமலையடிகள் இருந்திருந்தால் நான் அவரின் தொண்டராக–அடித்தொண்டராக இருந்திருப்பேன். அவர்கள்தாம் இந்தத் தனித்தமிழ் உணர்ச்சியை நமக்கு ஊட்டியவர். நீண்ட காலமாக நம் தமிழ்மொழியானது மிக மறையுண்டும் புதையுண்டும் கிடந்தது. போன நூற்றாண்டிலே கால்டுவெல் என்கின்ற வெளிநாட்டு ஆராய்ச்சியறிஞர் இத்தென்னாட்டிலே வந்து, ஓர் அரை நூற்றாண்டு திருநெல்வேலியில் தங்கியிருந்து, ஆராய்ந்து திரவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் ஓர் இலக்கண நூலை இயற்றினார்கள். அவர்கள் காலத்திலே, பெரும் தமிழ்ப் புலவர்களுக்கே, அஃதாவது தமிழ் அதிகாரிகள் என்று சொல்லத் தக்கவர்களுக்கே, பண்டைத் தமிழ் நூற்கள் என்று சொல்லப் பெறுகின்ற கழகநூற்கள் எவை என்று தெரியாவாம். திரிசிரபுரம் என்கின்ற திருச்சிராப்பள்ளியிலிருந்து, பர். உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கும் ஆசிரியராக விருந்து கற்பித்த பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்குக் கழக நூற்கள் என்றால் என்னவென்றே தெரியாதாம். அந்தநிலை இந்தத தமிழ நாட்டிலே இருந்தது.

அந்தக் காலத்திலே–அஃதாவது காரிருள் சூழ்ந்த அந்தக் காலத்திலே–வழி தெரியாத ஒருவர் தன்னந்தனியாகச் சென்று ஆராய்வது போல் கால்டுவெலார் ஆராய்ந்து பல உண்மைகளைக்

கண்டு பிடித்தார். தமிழன் மேனாட்டிலிருந்து வந்தவன் என்ற தவறான ஓர் அடிப்படைக் கொள்கையை அவர் கொண்டு விட்ட தினாலே சில உண்மைகளை அவர் அறிய முடியவில்லை. உயர்ந்த நாகரிகம் ஆரியருடையது என்று சொல்லி விட்டார். கொற்கையிலே தான் தமிழ் நாகரிகம் தோன்றியது என்றும் சொல்லிவிட்டார். அவர் காலத்திலே தொல்காப்பியம் போன்ற நூல்கள் இல்லை. அது மறைந்து கிடந்தது. நன்னூலும் திருக்குறளுந்தாம் பயிலப் பெற்று வந்தன. அதனால், அவர் மற்ற பண்டை நூல்களை அறியாததி னாலே தமிழர் மேல் நாட்டிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்ற தவறான கொள்கையைக் கொண்டு விட்டார். அவ்வாறிருந்தும் தமிழ்மொழியானது ஆரியத்திற்கு முந்தினதே என்று மிகத் தெளி வாகப் பல இடங்களில் சொல்லியுள்ளார்.

அதற்குச் சிறப்பாக அவர் எந்த அடிப்படையை எடுத்துக் கொண்டார் என்றால், மொழியின் சொல் தொகுதியிலே, மூவிடப் பெயர்கள் இருக்கின்றனவே, அவற்றில் சுட்டுச் சொற்களையே எடுத்துக்கொண்டார். அவற்றை வைத்து, தமிழ்மொழிதான் ஆரியத் திற்கு மூலம் என்று சொல்லுகிறார். பலர் இதை இன்னும் சரியாகப் படிக்கவில்லை என்று நான் கருதுகின்றேன். கால்டுவெல் எழுதிய அந்த ஒப்பியல் இலக்கணத்தைத் திரும்பவும் சரியாகப் படித்துப் பாருங்கள். அதில் அந்தக் கருத்தைப் பலவிடங்களில் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார். "மாந்தனின் முதல் பெற்றோர்-மொழி யினின்று வழி வழி வந்தவர்-கூறியவையாகக் கருதும் ஒரு சொல்தொகுதியானது திரவிட மொழிகளில் இன்னும் வழங்கி வருகின்றது" என்று அவர் கூறியிருக் கின்றார். அது மிகவும் உண்மை. அவர் எந்த அடிப்படையில் அதை ஆராய்ந்தார் என்றால், இந்தக் கொடிவழி முறையில் ஆராய்ந் துள்ளார்.

மொழியாராய்ச்சி இருவகைப் பட்டது. ஒன்று கொடிவழி முறை என்பது; இன்னொன்று வடிவியல் முறை; அஃதாவது Morphological முறை. கொடிவழி முறை என்பது Genealogical. இந்தக் கொடிவழி முறையில்தான் உண்மையை அறிய முடியும். மேலையாராய்ச்சியாளர்களெல்லாரும் இந்தக் காலத்திலே ஆரியத்தை அடிப்படையாக வைத்து, அதன் மூலத்தைக் காண முடியாமல் குன்று முட்டிய குருவி போல இடர்ப்பட்டு, "எல்லாமொழிகளும்

இடுகுறித் தொகுதிகளே; அஃதாவது ஒவ்வொரு மொழியும் அடிப் படைச் சொற்கள் உட்பட ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை முற்றிலும் மாறிவிடுகின்றது; அதனால் இற்றை நிலையை வைத்து, நாம் பண்டை நிலையை அறிய முடியாது'' என்று ஒரு தவறான முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் ஆங்கில மொழியையும் அடிப்படையாக வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய முறையை எடுத்துச் சொல்வதானால், ஓர் உவமை யால் உங்களுக்கு விளக்கலாம். அவர்கள் வரலாற்றுத் துறையையே அடியோடு விட்டு விட்டார்கள். அஃது, இப்பொழுது இங்கே உள்ள ஆரியச்சார்பானவர்களுக்கும், தமிழ்ப் பகைவர்களுக்கும் மிகவும் கொண்டாட்டமாயிருக்கின்றது. ஏனென்றால், வரலாற்று முறையில் ஆராய்ந்து பார்த்தார்களென்றால் இந்த (தமிழ் முந்தியது; ஆரியம் பிந்தியது என்னும்) உண்மை நாளடைவில் வெளிப்பட்டு விடும்; அப்புறம் அவர்கள் ஏமாற்று எல்லாம் தெரிந்துவிடும். அவற்றை அடியோடு மறைத்துக் கொள்ளுதற்கு இந்த வண்ணனை மொழியா ராய்ச்சி (வடிவியல் முறையை அடிப்படையாகக் கொண்டது) அவர்களுக்குத் துணை செய்கின்றது.

ஒரு குடும்பத்தில் பெற்றோர் யார்? பிள்ளைகள் யார்? அண்ணன் தம்பி யார்? அக்கை தங்கை யார்? என்றெல்லாம் ஆராய்ந்தறியாமல், ஒரு குடும்பத்தில் எத்தனைப் பேர் இருக்கிறார்கள்? எத்தனைப்பேர் நெட்டையர்? எத்தனைப் பேர் குட்டையர்? எத்தனைப் பேர் என் னென்ன நிறத்திலிருக்கிறார்கள்? என்னென்ன இயல்பு அவர்களுக்கு உண்டு— இவற்றைத் தாம் எடுத்துச் சொல்ல வேண்டும். மற்றபடி ஒன்றுஞ் சொல்லக் கூடாது. இதுதான் வண்ணனை மொழியாராய்ச்சி.

தெ. பொ. மீ. என்னும் ஒருவரை உங்களுக்குத் தெரியும். நம் பேராசிரியர்களுள் ஒருவர். இப்பொழுது இருக்கின்ற ஒரு கேடான நிலைமை என்னவென்றால், மற்ற நாடுகளிலே இல்லாத ஒரு நிலைமை இங்கே தமிழை எவன் ஆராய்கின்றானோ அவனுக்கு ஒருவகை மதிப்பும் இல்லாமற் போக வேண்டும். அவனுடைய வாழ்க்கைக்கும் இடமில்லை, இங்கே! தமிழை எவன் காட்டிக் கொடுக்கின்றானோ அல்லது பகைக்கின்றானோ அல்லது பகைவரோடு சேர்ந்து கொண்டு கருத்தறிவிக்கின்றானோ அவனுக்குத்தான் நிறைய மதிப்பும் வாழ்வும் ஏற்பட வழியிருக்கின்றன, இங்கே!

தமிழ்மொழியே உலக முதன்மொழி. அஃதாவது திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமானது. திராவிடத்திற்குத்தாய் என்று முதன்முதல் நமக்கு உணர்த்தியவர் மனோன்மணியம் **சுந்தரனார்** ஆவார். சென்ற நூற்றாண்டிலே, இந்தியா முழுமையும் மட்டுமில்லை, உலக முழுமையும் ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருந்தது ஆங்கில மொழி. அந்த மொழி ஒன்றுதான் உயர்வாகக் கருதப் பெற்றது. அதில் பேசியவர்கள்தாம் உயர்ந்தவர்கள் என்றோ தேவர்கள் என்றோ மதிக்கப் பெற்றார்கள். தமிழ்மொழி தாழ்த்தப் பெற்ற ஒரு மொழியாக விருந்தது. அது நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அந்தக் காலத்தில் மேடை மேல் ஏறியவர்கள் எல்லாரும் **'எனக்கு தமிழ்த் தெரியாது'** என்று சொல்வதையே பெருமைக்கு ஒரு சான்றாக மதிக்கப் பெற்ற காலம் அது. அந்தக் காலத்திலே, ஆங்கில அறிஞராக ஒருவர் தோன்றினார், தமிழ்த் தொண்டராக! அவர்தாம் பேரா. **சுந்தரனார்**. அவர்தாம் தமிழ்மொழி விழிப்பு உணர்ச்சியை முதன் முதல் தமிழர்களுக்கு ஊட்டியவர். அவர்தாம் தமிழுக்குப் பள்ளியெழுச்சி பாடினார் என்று சொல்லலாம். **''நீராருங் கடலுடுத்த''** என்னும் பாட்டு அது. **''ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்''** என்பதுதான் அவர்பாடிய அப்பாட்டில் ஓர் உயிர் நாடித் தொடர். அந்த அடியைத்தான் இப்பொழுது ஒழித்துவிட்டார்களே, அக்கருத்து ஒரு சாரார்க்குப் பிடிக்கவில்லை என்று! ஆகையினால் அந்தப் பாட்டைப் பாடாமலே விட்டுவிடுவது நல்லது. அதை எழுதிய ஆசிரியரவர்கள் இந்தக் காலத்திலே இருந்திருப்பாராணல் அந்த நிலைக்கு மிக மிக வருந்தியிருப்பார். ஒரு வேளை அதன் பொருட்டு அவர் உண்ணா நோன்புகூட இருந்தாலும் இருந்திருப்பார். இப்படி அந்தப் பாட்டின் கருத்து மறைக்கப் பட்டிருக்கின்றது.

இக்கால், **'அமுதசுரபி'** என்னும் ஓர் இதழில் **'அகிலம் முழுவதும் அந்தணர் மயம்'** என்று ஒரு கட்டுரை வந்ததாம். அக்கட்டுரையில் அந்தணர் என்ற ஒரு சொல்லைச் சேர்த்துக் கொண்டதே தவறு. அந்தணர் என்னுஞ் சொல் ஆரியர்களைக் குறிக்குஞ்சொல் அன்று. ஆனால் அதை ஆரியர்களைக் குறிப்பதாகத் தவறாகக் கருதிக் கொண்டு எழுதியுள்ளார் அதன் ஆசிரியர் **கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்** என்பவர். **கிருஷ்ணம்** என்ற சொல்லுக்கு மூலம் **'க்ருஷ்'** என்பது அதற்குக் **'கருப்பு'** என்பது பொருள்.

'க்ருஷ்ணபக்ஷம் (கரும்பக்கம்) க்ருஷ்ணஸர்ப்பம் (கரும்பாம்பு) என்று வரும். க்ருஷ்ணன் என்ருல் மாயோன். மாயோன்–கரியவன் என்பதையே மொழி பெயர்த்து வைத்திருக்கிருர்கள். ஒருவேளை வடநாட்டுக் கண்ணன் என்பானும் கரியவனுக இருந்திருக்கலாம். ஆனுல் அவன் தமிழன் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. தென்மதுரை முழுகிப்போன பின் தென்னுட்டிலிருந்துபோன தமிழ் மக்கள்தான் அங்குப்போய் மதுராபுரி என்று அங்குள்ள ஓர் ஊருக்குப் பெயரை வைத்துக் கொண்டார்கள். எப்படி ஆங்கிலேயர்கள் அமெரிக்காவிற்கும் ஆத்திரேலியாவிற்கும் போய், தங்களின் பழைய நாட்டை நினைவு கூர்வதற்காக 'இங்கிலாந்து' என்ருல் 'நியூ இங்கிலாந்து' என்றும், 'யார்க்கு' என்ருல் 'நியூயார்க்கு' என்றும் பெயர்களை வைத்துக் கொண்டார்களோ, அதே போல் தென்னுட்டிலிருந்து போன நம்மவர்களும் வடநாட்டுக்குப் போய் 'மதுரை' என்றே பெயர் வைத்தார்கள். இப்பொழுது அது 'மத்ரா' என்று வழங்கி வருகின்றது. அங்கே தான் கண்ணன் இருந்தான். அவன் ஆயர் குலத்தைச் சேர்ந்தவன். அவன் தூய தமிழன். அங்குள்ள வழக்கத்தையெல்லாம் பார்த்தீர்களானுல், கண்ணன் அக்கால் தென்னுட்டில் உள்ள வழக்கப்படியே நப்பின்னையை ஏறு தழுவி மணந்தான் என்று இருக்கின்றது. இவ் வழக்கம் நம் நாட்டின் முல்லை நிலத்தின் விழாவை யொட்டியது. ஒவ்வோர் ஆயர் குடும்பத்திலும் ஒரு சேங்கன்று பிறந்தவுடன் அதற்கு அக்குடும்பத்தில் உள்ள பெண்ணின் பெயரை வைத்து அதை வளர்த்து வருவார்கள். அந்தப்பெண்ணுடன் அந்தக் கன்றும் நன்கு வளர்ந்து காளையாகும். அந்தக் காளையை எவன் பிடித்து அடக்குகின்ருனே அவனே அந்தப் பெண்ணை மணப்பதற்குரியவன் என்று தீர்மானிப்பார்கள். இதெல்லாம் அக்காலத்தில் இருந்த ஒரு வழக்கம். அந்த முறைப்படி அந்தக் கண்ணனும் மணந்தான்.

இப்பொழுது, க்ருஷ்ண என்ருல் கருப்பன் என்றுதான் பொருள். நீங்கள் அகர முதலியை எடுத்துப் பாருங்கள். அதிலே 'கருள்' என்ற தூயதமிழ்ச் சொல் இருக்கும். கருள்–என்ருல் கருப்பு. இந்தக் 'கருள்' என்னுஞ் சொல்தான் வடமொழியில் 'க்ருஷ்' என்று திரியும். 'சுள்' என்று ஒரு சொல் உண்டு. 'சுள்' என்று வெயிலடிக்கின்றது என்று நாம் சொல்வதில்லையா? சுள் என்ருல் சுடுதல் என்னும் பொருள் குறிக்கும் ஒரு சொல் மூலம். காய்கிறது, சுடுகிறது

என்பதையெல்லாம் இந்த 'சுள்' என்னும் சொல் உணர்த்தும். காய்ந்துபோன குச்சியைச் 'சுள்ளி' என்று சொல்கிறோம். சுள் என்னும் மூலத்திலிருந்துதான் 'சுரம்' என்று வெப்பத்தைக் குறிக்கும் சொல் பிறக்கும். அதை வடமொழியில் 'சுஷ்' என்று வைத்திருக்கிறார்கள். சுக்கு இருக்கின்றதே காய்ந்து போன இஞ்சி, அது காய்ந்து போனதால்தான் சுள்+கு சுக்கு என்று சொல்கிறோம். இந்தச் சுக்கைச் சமசுக்கிருதத்தில் 'சுஷ்க' என்று சொல்கிறார்கள். நம் 'சுள்'ளை அவர்கள் 'சுஷ்' என்று மாற்றி அதை அவர்களுடைய சொல் என்று வேறு சொல்கின்றார்கள். இன்னும் என்ன சொல்கிறார்கள், 'சுஷ்க' என்பதைத்தான் நாம் 'சுக்கு' என்று மாற்றிக் கொண்டதாகவும் சொல்கின்றார்கள். ஏன் தெரியுமா? தமிழன் திறந்த வாயன்.

அப்படி அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதுபோல் ஒன்று என்று எண்ணாதீர்கள் இதுபோல் எத்தனையோ எழுதிக்கொண்டு வருகின்றார்கள் அவற்றை யெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லிவிட முடியாது. ஆனால் தமிழர்களில் எவரும் இது பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை; யாரும் கேட்பதும் இல்லை. அதனால் "பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்றாகி வருகின்றது. இதையெல்லாம் ஏன் சொல்கின்றேன் என்றால், இப்படி 'அகிலம் முழுவதும் அந்தணர் மயம்' என்று சொல்கிறவர் தம் பெயரே எப்படி அமைந்திருக்கின்றது என்பதைத் தெரியாமல் இருக்கிறார். தூய சமசுக்கிருதச் சொல் என்று அவர் கருதிக் கொண்டிருக்கும் அவர் பெயரே தூய தமிழ் மூலததைக் கொண்டிருக்கின்றது. அதே போல் ஸ்ரீ என்பது 'திரு' என்பதன் திரிபு. திரு என்பதற்குத் திரண்டது என்பது பொருள். திரட்சி—திரண்டது. திரண்டது என்பது முதன் முதலில் செல்வத்தைக் குறித்தது. திருவரங்கம் என்று வழங்கியதைத்தான் இப்பொழுது ஸ்ரீரங்கம் என்று மாற்றி வைத்திருக்கின்றார்கள். அடுத்து 'நிவாஸ்' என்பதையும் பார்த்தீர்களானால், அதில் உள்ள 'நி' என்பது ஒரு முன்னொட்டு (அஃதாவது Prefix என்கிற உபசர்க்கம்). 'வாஸ்' என்பது வஸ் என்பதினின்று வந்தது. வஸ்-to dwell. 'வஸ்' என்பது 'வதி' என்னும் தமிழ் மூலத்தின் திரிபு. வதிதல் என்றால் தங்குதல் அல்லது வாழ்தல். இனி, இந்த 'வதி' என்னும் மூலத்தினின்று வேறு பல சொற்களை

எடுத்து உருவாக்கிக் கொண்டார்கள். அவற்றிற்கும் மூலம் தமிழிலேயே உண்டு. எனவே இஃது ஒன்றைக் கொண்டே நம் கருத்தை நாட்ட வேண்டும் என்பதில்லை. எத்தனையோ ஆயிரக் கணக்கான சொற்கள் இருக்கின்றன. நான் இவற்றைக் கண்டு கொள்ள ஓராண்டு ஈராண்டு அன்று ஐம்பது ஆண்டுகள் ஆராய்ச்சி யில் மூழ்கினேன். இவற்றுக்கு வேண்டிய சான்றுகளையெல்லாம் எல்லா நூல்களையும் படித்துத் தேடி எடுத்தேன்.

ஓர் உண்மையை நிலைநாட்டுவதற்கு நான்கு வழிகளை முன் னோர்கள் சொல்லி வைத்திருக்கின்றார்கள். அவை நால்வகை அளவைகள் (பிரமாணங்கள்) எனப்படும். அவை காட்சி, கருத்து, ஒப்பு, உரை என்பவை. அவற்றைத்தான் அவர்கள் சமசுக்கிருதத்திலே பிரத்தியட்சம், அநுமானம், உபமானம், ஆகமம் என்று பகுத்து வைத்திருக்கின்றார்கள். இப்பொழுது நமக்குக் காட்சி சான்று இல்லை. சிலர் கேட்கிறார்கள், தமிழ்நாடு குமரிநாடு என்பதற்கும் தமிழன் குமரி நாட்டான் என்பதற்கும் நமக்குக் காட்சி சான்று அஃதாவது பழம் பொருட்கலை Archaeological evidence நமக்கில்லையே என்று. அப்படி ஏன் இல்லை என்றால், நம்முடைய பழைய நிலமெல்லாம் கடலுள் மூழுகிப் போய் விட்டது. காவிரிப் பூம்பட்டினம் எப்படி மூழ்கிப் போய் விட்டதோ அப்படியே தெற்கே விருந்த அந்தக்குமரி நாடு, பழந்தமிழ் நாடெல்லாம் முழுகிப் போய் விட்டது. தெற்கே ஒரு பெரிய நிலம், அஃதாவது பனிமலை என்கின்ற இமையமலை எவ்வளவு தொலைவில் உள்ளதோ அவ்வளவு தொலைவில் குமரிமலை என்று ஒரு பெரிய மலை தென்கோடியில் இருந்தது. அந்த இடத்தில்தான் நம் முன்னோர்கள் தோன்றினார்கள். அதனால்தான் அந்தக் காலத்திலேயே பாண்டியன் சிதம்பரம் என்று சொல்லப்பெறும் தில்லையை நடுவிடமாக வைத்துக் கணக்கிட்டான். நெஞ்சாங்குலையின் துடிப்புப் போன்றது இறைவனுடைய ஆற்றல். அந்த இறைவனுடைய தொழிலைத்தான் மூன்றாகவோ ஐந்தாகவோ சொல்லி, அதை நடம் என்று உருவகித்துச் சொல்கிறது. வடக்கே போனாலும் ஓர் ஈராயிரத்து ஐநூறு கல். தெற்கே போனாலும் ஓர் ஈராயிரத்து ஐநூறு கல். நடு இடம் அந்தத் தில்லை. பாண்டியனே அந்த இடத்தை அப்பொழுதே அமர்த்திவிட்டான். இந்தச் சிவனடியார்களுக்கெல்லாம் சிறந்ததான உருத்திராட்சம் (உருத்திரா-அட்சம் சிவனுடைய

கண்மணி.) தொன்றுதொட்டு விளைவது நேபாள நாட்டிலேதான். முதலில் மதுரையை நான் சொன்னேன். அதற்கு முன் தமிழர்கள் வங்கத்திலே தங்கி அங்கு ஒரு காளி கோயிலை உண்டாக்கினார்கள். அதனால்தான் அதற்குக் காளிக் கோட்டம் (Calcutta) என்று பெயர். இன்றைக்கும் வடமொழியிலே காளிக்கட் என்றுதான் சொல்வார்கள். ஆங்கிலத்தில்தான் கல்கத்தா என்று சொல்வார்கள். அதனால் வடநாட்டில் உள்ளதெல்லாம் ஆரியருடையது என்று தவறாக நாம் கருதிக்கொள்ளக் கூடாது. வடநாட்டிலே ஒரு காலத்திலே தமிழர்களாகவே இருந்தவர்கள் பின்னர் திரவிடர்களாக மாறினார்கள். நம் மனோன்மணியம் சுந்தரனாருக்குப் பின்னாலே பிராமணத்தொண்டர் ஒருவரே தோன்றினார் இந்தத் தமிழைக் காப்பதற்கு. அவர்தாம் பரிதிமாற்கலைஞர் என்னும் சூரிய நாராயணசாத்திரியார். அவர் வரலாற்றை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். அவருடன் நெருங்கிப் பழகியவர்களைக் கேட்டால்தாம் பல உண்மைகளெல்லாம் விளங்கும். சிறந்த தமிழ்ப்பற்றுள்ள உண்மையான தொண்டர். சிறந்த பண்பாடுள்ளவர். கிறித்துவக் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராக விருந்த பொழுது, பிராமண மாணவர்களை வைத்துக் கொண்டு சொல்லியிருக்கின்றார், "பிராமணர் தமிழரை ஏமாற்றிவிட்டார்" என்று. எவ்வளவு துணிச்சலும் நெஞ்சுரமும் கள்ளங்கவடற்ற தன்மையுமிருந்தால் அவர் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும் என்று கருதிப்பாருங்கள். அவர் தம் இறுதிக் காலத்தில் இருமல் நோயால் பேரிடரும் பெருந்துன்பமும் பட்டார், அப்பொழுதும் அவர் அன்பளிப்பாகவோ கட்டணமாகவோ காசு பணம் ஒன்றும் வாங்காமல் மாணவர்களுக்கு இலவயமாகத் தமிழைப் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தார் அடிக்கடி அவர்க்கு இருமல் வருமாம். இவரோ இருமிக்கொண்டே பாடம் சொல்வாராம், "இருமல் என்னோடு பெருமல் செய்கிறதே" என்று.

நம் நாட்டிலே, பழைய காலத்திலே, இந்தியா முழுவதும் பெருவாரியாகப் பரவியிருந்தது, இக்கால் தென்னாட்டிலே சிறந்த சமயமாக விருக்கின்ற சிவநெறிதான். அந்த சிவ சமயத்திலே, பரிதி மாற் கலைஞர்க்குப் பிறகு தமிழில் சிறந்த புலவராகவும் ஆங்கிலத்திலே சிறந்த அறிஞராகவும் சிறந்த சிவநெறியாளராகவும் பண்பு மிக்கவராகவும் விளங்கிய பேரறிஞர் ஒருவர் தோன்றினார். அவர்தாம்

தனித்தமிழ் உண்மையை நமக்கு விளக்கமாக அறிவித்தார். அவரே மறைமலையடிகள். அவர்களுக்குப் பின்னாலே நான் இந்தத் தனித்தமிழ் இயக்கத்தை வளர்த்து வருகின்றேன். இந்தப் பணிக்குக் கிறித்துவ சமயத்தைச் சேர்ந்த ஒருவனாகிய என்னை ஏன் இறைவன் தோற்றினான் என்றால், அந்த உண்மையை நீங்கள் அறிதல் வேண்டும். மேனாட்டாருக்கு நம் குமரிநாட்டு வரலாற்றை அறிவதற்கு ஒரு பெருந்தடையாக விருப்பது இந்த (பைபிளில் சொல்லப்பெற்ற) ஏதேன் தோட்டக் கதை. ஏற்கனவே அந்த மதப்பற்றில்லாதவர்கள் கூட இனப்பற்று ஒன்றின் கரணியமாக நம்மைத் தாழ்வாகக் கருதுகிறார்கள். திரவிடரோடு அஃதாவது தமிழரோடு நாம் தொடர்பு கொள்வதாயிருந்தால் அது மிகவும் இழிவு என்று அந்த மேனாட்டார் களில் சிலர் கருதுகிறார்கள். சமசுக்கிருதம் என்றாலோ பிராமணர்கள் என்றாலோ, “அவர்கள் நம்முடைய இனத்தார்; நமக்கு இனமான ஒரு மொழியைப் பேசுகிறவர்கள்” என்று அவர்களுடன் தொடர்பு கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். அதைக் கூட ஒரு காலத்தில், அஃதாவது மாக்சுமில்லர் காலத்திலே, அவர்கள் அந்தக் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் ஆரியர்கள் மேனாட்டார்களைத் தம் சொந்த இனத்தார் என்று கூறி அவர்களைச் சரிப்படுத்தி வைத்துக்கொண்டனர். இப்பொழுது சமசுக்கிருதம்தான் மேலை ஐரோப்பிய மொழிகளுக்கெல்லாம் மூலம் என்று அவர்கள் நன்றாக உறுதியாக நம்புகிறார்கள். நீங்கள் 1970–ஆம் ஆண்டிலே வெளியான ‘பிரித்தானிய கலைக்களஞ்சியம்’ (Encyclopeadia Brittanica) என்கிற நூலை ஒருமுறை பாருங்கள். அதிலே அமெரிக்கப் பதிப்பைப் பார்த்தீர்களானால், இந்த இந்தியா படம் எங்கெங்கு வருகின்றதோ அங்கெல்லாம் கரியைப் பூசி வைத்திருக் கிறார்கள். “முகத்திலே கரியைப் பூசி விட்டான்” என்று நாம் கூடச் சொல்லுகின்றோமே அந்தச் சொற்படியும் பொருள்படியும் அது சரியாக விருக்கின்றது. அந்த Demigration என்பது அதிலே மிகப் பொருத்தம். வெபுசுடர் பேரகர முதலி (Webster Dictionary) என்று ஓர் அமெரிக்கப் பதிப்பு உளது. அதிலும் அப்படியே செய்திருக் கின்றனர். இந்தப் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் இருபத்து நான்கு மடலம், மூவாயிரம் உருபா. அதில் பிற்பகுதியிலே நிலப் படங்களையெல்லாம் காட்டியிருக்கின்றனர். அவற்றில்தான் இந்தியப் பகுதியை மட்டும், அது பெரிய படமாகவிருந்தாலும் சரி, சிறிய படமாக விருந்தாலுஞ் சரி முழுவதும் கரியைப் பூசி வைத்து

விட்டார்கள். ஆனால் பாக்கித்தான் பகுதிகளை மட்டும் நன்றாக மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். இந்நிலை எதனாலே என்றால், இந்த எல்லைச் சச்சரவு (சச்சரவு என்பதைத் தகராறு என்று சொல்வோம்; அஃது உருதுச் சொல்; எனவே அதை விட்டுவிட வேண்டும்) ஏற்பட்டதே அப்பொழுது அவர்கள் பாக்கித்தானியர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள வேண்டுமே என்பதற்காக, அப்படிச் செய்ததாகத் தெரிகிறது. இது தவிர அதற்கு வேறு ஒரு கரணியம் இருப்பதாக உய்த்துணர முடியவில்லை. இப்படிச் செய்ததனால் இந்தியர் அனைவரையுமே இழிவு செய்திருக்கிறார்கள். இந்த நிலையை வைத்துப் பார்க்கும் பொழுது தமிழர்களைப்பற்றி அவர்கள் தாழ்வாக மதிக்கின்றார்கள் என்று சொன்னால் அதில் வியப்பதற்கு இடமில்லை.

இவ்வாறுதான் மாந்தத் தோற்றவரலாறும் மறைக்கப்பட்டு இருக்கிறது. மாந்தன் தோன்றியது மேனாட்டிலே உள்ள ஏதேன் தோட்டத்திலேதான் என்று கிறித்துவர்களின் திருப்பொத்தகம் என்னும் பைபிளிலே சொல்லப் பெற்றிருக்கின்றது. அதைத்தான் மேனாட்டார்கள் நம்புகிறார்கள். இதற்கு நாம் இப்பொழுது ஒரு புது விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. உண்மையானது எத்தனைக்காலமானாலும் அல்லது எத்தனைத் தடைகள் இருந்தாலும் எப்படியாகிலும் வெளிப்படத்தான் செய்யும் Oil and truth get uppermost at last —என்பது ஆங்கிலத்தில் ஒரு பழமொழி. எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேற்படும். ஆகவே நாம் முனைய வேண்டியது இன்றியமையாததாகின்றது. ஓர் உண்மையான ஆராய்ச்சியாளருக்கு ஆறு தகுதிகள் அமைய வேண்டும். கூர்மதி, பரந்தகல்வி இந்த இரண்டும் எல்லாருக்கும் பொதுவாக இருக்கின்றன என்றுகூட சொல்லிவிடலாம். ஆனால் மற்ற நான்கு தகுதிகளாகிய நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறியவா என்பவை மிக இன்றியமையாதவை. இவையில்லாவிட்டால் ஒருவன் ஆராயவும் முடியாது; உண்மையை அறியவும் முடியாது. யாரைக் கண்டாலும் எங்கு அமைச்சருக்கு மாறாகப் போய்விடுமோ எந்த மேலதிகாரிக்காகிலும் வருத்தம் உண்டாகிவிடுமோ அல்லது ஓர் இனத்தாருடைய பகையைத் தேடிக்கொள்ளும்படி நேர்ந்து விடுமோ மேலும் மேலும் நம் பதவி உயர வேண்டும்; பணம் தொகுக்க வேண்டுமே—என்றெல்லாம் கருதினால் ஒருவன் உண்மையான ஆராய்ச்சியாளனாக விருக்க முடியாது.

இந்தக் குமரிநாட்டு வரலாற்றை ஒப்புக்கொள்ளுகின்றதென்றால் அஃது ஓர் எளிய செய்தியன்று. ஆனால் அஃது உண்மை. உண்மையை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். காட்சி, கருத்து, ஒப்பு, உரை என்று நால்வகை அளவைகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அவற்றுள்ளே இப்பொழுது காட்சியை நாம் காண முடியாது என்று சொன்னேன். ஏனென்றால் தெற்கே இருந்த குமரி நாடு இப்பொழுது கடலில் முழுகிக் கிடக்கின்றது. அவ்வாறு முழுகிக் கிடக்கின்ற நாடு முழுவதும் பாண்டியநாடு என்பதை நீங்கள் அறிய வேண்டும். அது தமிழ் நாடு மட்டுமன்று; அது பாண்டியநாடு. இந்தக் குமரி முனையிலிருந்து ஒரு கோடு வடக்கே இழுக்கப்பட்டால் கீழ்ப்பகுதியெல்லாம் சோழ நாடு, மேற்குப்பகுதியெல்லாம் சேர நாடு. தெற்கே முழுகிப்போன நிலம் முழுமையும் பாண்டி நாடு. அந்தப் பாண்டி நாடு முழுகிப்போன பின்னர்தான், அந்தக் கடல்கோளுக்குத் தப்பிய பாண்டியர்கள் இந்தச் சேர நாட்டின் ஒரு பகுதியையும் சோழ நாட்டின் ஒரு பகுதியையும் கைப்பற்றித் தங்களுடைய குடிகளுக்குக் கொடுத்தார்கள் என்று **அடியார்க்கு நல்லார்** சிலப்பதிகார வுரையில் வரைந்திருக்கிறார். **கருத்து** (அளவை) என்பது உய்த்துணர்வது. ஒருவனைப் பார்த்து 'உன்னுடைய பாட்டனுடைய பாட்டன (அவனுக்கு ஓட்டன் அல்லாது சேயான் என்று பெயர். இந்தப் பகுதியில் ஓட்டன் என்று சொல்வார்கள்; திருநெல்வேலிப் பகுதியில் சேயான் என்ற சொல் வழக்கிலிருக்கின்றது. அதைப் படியாதவர்கள் ஜியான் என்பார்கள். 'உங்கள் ஜியான் காலத்திலே கூட இது இல்லையே' என்பார்கள். அவனையே எடுத்துக் கொள்வோம். அவனுக்கு முந்தினவனைக்கூட வேண்டாம்.) இருந்தானா? என்று கேட்டால், அவன் என்ன சொல்லுவான். 'இருந்தான்' என்பான். உடனே, 'நீ அவனை கண்டாயா' என்று கேட்டால் என்ன சொல்லுவான். 'நான் காணவில்லை' என்பான். 'அப்படியானால் அவனை நீ காணாமலேயே அவன் இருந்தான் என்று எப்படிச் சொல்லலாம்' சொல்லலாமா ? அப்படிச் சொல்லுகிறார்கள்.

இப்பொழுது நாம் ஒன்றை முடிவு செய்ய வேண்டுமானால் நமக்குப் பல சான்றுகள் இருக்க வேண்டுமே. அளவை நூலின் முதற்பகுதியிலேயே ஒரு விளக்கம் சொல்வார்கள். 'எல்லாமாந்தரும் இறப்பவரே. சாத்தன் ஒரு மாந்தன். எனவே அவனும் இறப்பவனே'

என்று சொல்லுவார்கள். இப்படியில்லாமல் 'எல்லா மாந்தரும் இறவாதவரே' என்று அடிப்படையையே தவருக வைத்துக் கொண்டால் முடிவும் தவருகத்தான் வரும். "அப்படியாளுல் சாத்தன் ஒருமாந்தன்; சாத்தனும் இறவாதவனே" என்று முடிவு காண வேண்டியிருக்கும். மேனுட்டாருடைய ஆராய்ச்சி அப்படி யிருக்கின்றது. மேலே நாடுகளில் மிகப்பெரிய ஆராய்ச்சியறிஞர்கள் இருக்கின்ருர்கள். பரோ, எமனே என்னும் இருவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். பரோ என்பவர் இலன்டனில் இருக்கின்ருர். எமனே என்பவர் அமெரிக்காவில் இருக்கின்ருர். இருவரும் பெரிய அறிஞர்கள். மொழிநூல் அறிஞர்கள்தாம். திரவிட மொழிகளையும் படித்திருக்கிருர்கள். ஆளுல் தமிழரைப் போல தமிழை ஆழ ஆராய முடியாது. தமிழ் மிகமிகப் பழைமையான மொழி.

இப்பொழுது மாந்தனுடைய வரலாற்றை எடுத்துக் கொண்டால், பகுத்தறிவுள்ள மாந்தன் தோன்றினுனே அக்காலம் தமிழன் காலத்திலேதான் தொடங்குகின்றது. அவ்வளவு பழமையான காலம் தமிழர்களுடையது. பலர் இப்பொழுது தமிழில் உள்ள மிகப் பண்டைய நூலாகிய தொல்காப்பியத்தை ஆராய்ந்து அத்துடன் நின்று கொள்கின்ருர்கள். தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 7–ஆம் நூற்ருண்டு. ஆளுல் அதற்கு முந்திப் போக வேண்டும் மாந்தன் தோன்றிய காலத்திற்கு .கி.மு. நூருயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போளுல்தான் தமிழனுடைய தோற்றத்தை நாம் அறிய முடியும். அந்த அளவுக்குப் பழமையானது தமிழ்மொழி. அவர்களுக்கு (பரோ, எமனேவிற்கு) இந்த உண்மைகள் தெரியாது. அவர்களுக்கு எடுத்துச் சொல்வாரும் இல்லை. கால்டுவெல் சொன்னது உண்மை தான்; ஆளுல் பிற்காலத்திலே அவர்கள் ஆரியத்திற்குச் சிறப்புக் கொடுத்ததினுலும் ஆரியத்தை வைத்து அவர்கள் அடிப்படையைக் காண முடியாமையினுலுந்தான் எல்லா மொழிகளும் இடுகுறித் தொகுதிகள் என்னும் முடிவுக்கு வந்து விட்டார்கள்.

இப்பொழுது, இந்தக் காட்சியளவைக்கு–பழம்பொருள் கலைக்கு–நமக்கு இடமே இல்லை. இக்கால் சில மண்டையோடுகளைக் கண்டெடுத்துக் கொண்டு சிலர், இதுதான் இக்காலம், அதுதான் அக்காலம் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆளுல் எந்தக் காலத்திலும், ஒரு நாகரிக காலத்திலும் கூட முத்திறப்பட்ட ஆட்கள் இருந்தே தீருவார்கள். அவர்கள் தலையாயார், இடையாயார்,

கடையாயார் எனப்படுவர். இப்பொழுதுள்ள காலத்தை நாகரிக மில்லாத காலமென்று சொல்ல முடியுமா? ஆனால் இன்றும் இந்த ஆனைமலைப் பகுதிகளுக்கு நீங்கள் போனீர்களானால் அங்கு இன்னமும் நாகரிகத்தில் மிகக்குறைந்த காடர்கள் போன்ற மக்கள் இருக்கிறார்கள். இன்னும் அந்தமான் போன்ற தீவுகளில் இன்னும் நாகரிக மடையாத மக்களும் இருக்கிறார்கள். ஆனால் ஏதாவது ஒரு மண்டை யோட்டைக் கண்டெடுத்தவுடனே இதுதான் நாகரிக மாந்தனுடையது அல்லது தமிழனுடையது என்கிற முடிவுக்கு நாம் வந்துவிடக் கூடாது; வந்துவிட முடியாது. இப்பொழுது இசையை எடுத்துக் கொள்ளுங்கள். தோற்கருவிகளுக்குள்ளே மிகச் சிறந்தது மத்தளம் என்கின்ற மதங்கம். அஃது ஓர் உயர்ந்த இசையரங்கிலே அடிக்கப் பெறுகிறது. ஆனால் இன்னோர் அரங்கிலே ஒருவன் கஞ்சுரா அடிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அது தோற்கருவி களுக்குள்ளே தாழ்ந்த கருவி. இந்நிலையில் ஓர் அயல் நாட்டார் அந்தக் கஞ்சுரா அடிக்கின்ற அரங்கத்திற்குப் போய்க் கேட்டார் என்றால், அவர் 'இந்தக் காலத்திலே இவர்கள் இப்படிப்பட்ட கருவியைத்தான் வைத்திருக்கிறார்கள்' என்ற முடிவுக்குத்தான் வர முடியும். அப்படித்தான் ஒவ்வொரு நாட்டிலும், துறையிலும் தாழ்ந்த நிலை, உயர்ந்தநிலை, இடைப்பட்டநிலை என்பனவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும். (—தொடரும்)

0 *மாந்தவியல் முடிபுகளும், மொழியியல் முடிபுகளும், இலக்கண இலக்கிய அகப்புறச் சான்றுகளும் கொண்டு உருவாக்கிய பண்டை வரலாற்றுக் கருவூலம்.*

0 *தமிழர் தம் கைகளில் மிளிரவேண்டிய நூற்செல்வம்!*

# தமிழர் வரலாறு

**மொழிஞாயிறு: ஞா. தேவநேயப்பாவாணர், க. மு.**

**வெளிவந்து விட்டது: விலை உருபா: 12-50.**

(பதிவஞ்சலில் வேண்டுவோர் 3 உருபா சேர்த்து விடுக்க.)

*கிடைக்குமிடம்*

தே. மணி

ஆ-1135-2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,

காட்டுப்பாடிவிரிவு (அஞ்); வ. ஆ. மாவட்டம்.

ஒரு திறனாய்வு.

## பேரா. மு. வரதராசனாரின்

# தமிழிலக்கிய வரலாறு.

த. கோவேந்தன்.

(12-8-73ஆம் நாள் நடுவண் நூலகக் கட்டிடத்தில் நடந்த தமிழ்த்திறனாய்வு மன்றத்தில் படிக்கப்பட்ட கட்டுரை.)

தமிழிலக்கிய வரலாற்றை எழுதுவதற்கு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பிருந்த வாய்ப்புகளைவிட இன்று அறிவியலும்-மொழியியலும்-வரலாற்றியலும் துணைநிற்கின்றன. ஆகையினால் பழைய கால முரண்பாட்டுச் சிக்கல்கள் தீர்ந்து இன்று தொல்காப்பியர் முதல் அண்மைக்கால பாரதிதாசனார் வரை வரலாற்று மூலங்கள் தெளிவாகத் தென்படுகின்றன.

பல ஏந்துகளும் ஏதுக்களும் உடைய இன்றைய நாளில் தமிழிலக்கிய வரலாறு மு. வ. பெயரில் குற்றங் குறைகளின் பெட்டகமாக வந்துள்ளதறிந்து மிக மிக வருந்தியே இந்தத் திறனாய்வினை இங்கே செய்கிறோம்.

திறனாய்வில் சில கடுமையான சொற்கள் கையாளப் பட்டமைக்குக் கரணியங்கள் மூன்று. ஒன்று, மு. வ. வின் முன் வெளிவந்துள்ள எந்த ஒரு நூலிலும் காண முடியாத இலக்கணப் பிழைகள் இந்த நூலில் பக்கந்தோறும் இடம்பெற்றுள்ளன. இரண்டு, நடு நிலைமை தவறி வேண்டியவர் வேண்டாதவர் என்ற விருப்பு வெறுப்போடு இக்காலத்து நூலாசிரியர்களை வெளிக் காட்டியும் மறைத்தும் செய்திருக்கும் குறுகிய மனப்போக்கு.

மூன்றாவது, இலக்கிய வரலாற்றாசிரியன் தான் குறிப்பிடும் புத்தகங்களைப் படித்திருக்க வேண்டும். அல்லது பார்த்தாவது இருக்க வேண்டும். இந்த இரண்டுமே செய்யாமல் சில நூல்களைப் பற்றித் தப்புந் தவறுமாக எழுதியுள்ளதாகும்.

மு. வ. வின் தமிழிலக்கிய வரலாற்றின் முன்னுரையைப் படித்ததும் எனக்கு எத்தனையோ கதைகள் நினைவுக்கு வரலாயின. "தமிழிலக்கியத்தின் வரலாற்று நூலின் எல்லா நூல்களைப்பற்றியும் விளக்கம் தர முடியவில்லை. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் தோன்றியுள்ள நூல்கள் கணக்கற்றவை. இந்த நூற்றாண்டின் அறுபது ஆண்டுகளில் தோன்றிய தமிழ் நூல்களின்

எண்ணிக்கை சென்ற இருபத்து நான்கு நூற்றுண்டுகளின் நூல் களின் எண்ணிக்கையை விட மிகுதி எனலாம். ஆகையால் அத்தனை நூல்களையும் இங்குக் குறிப்பிட முடியவில்லை. நூலாசிரியர் எல்லாருடைய பெயர்களையும் விடாமல் குறிப்பிடவும் முடியவில்லை. இலக்கிய வளர்ச்சியின் போக்கைச் சுட்டிக் காட்டுவதற்குத் தேவை யான நூல்களின் இயல்புகளும் ஆசிரியர்களின் பெயர்களுமே இங்குக் காணலாம்" (பக்கம் 23) என்று முதலிலேயே ஒரு கரிசு (பாவ) மன்னிப்புக் கோருகிருர். அதற்குக் காரணம் சாகித்திய அக்காதமியார், ஒரு குறிப்பிட்ட பக்கங்களுக்குள் நூலை முடித்துத் தரக் கோரினுர்கள் என்கிருர்.

தாம் செய்த பிழைக்கும், முறையற்ற போலித்தனமான முடிவு களுக்கும் கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்பதைப்போல் சாகித்திய அக்காதமியாரின் பக்கச் சுவருக்குள் புகுந்து கொள்கிருர் —தமிழ்ப் போராசிரியர் மு.வ.

ஒரு நூலாசிரியன் நேர்மையைத் தெரிந்து கொள்ள வேண்டு மாஞல் இலக்கிய வரலாற்றை எழுதச்சொன்ஞல் போதும். அதில் நூலாசிரியரின் நிறை -குறையும், விருப்பு-வெறுப்புகளும், ஏன் சில நேரத்தில் அவர்களின் அறியாமையும் வெளிப்பட்டு விடும்.

இந்திய மொழி இலக்கியத்திலேயே தமிழிலக்கிய வரலாறு தான் நீண்ட நெடும் பழமை உடையதாகும். சமற்கிருத மொழிக்கு மேலான பெருமையும் காலப் பழமையுமிருப்பதாலேயே தமிழிலக்கிய வரலாற்றினை எழுதிய அனைவரும் எவ்வளவு முரண்டுபாடுகளைக் காட்ட முடியுமோ அவ்வளவு முரண்பாடுகளைக் காட்டியுள்ளனர். இதற்கு உண்மையான காரணம் இலக்கியத்திலே முரண்பாடுகள் அல்ல, எழுதுகின்ற அத்தனைப் பேரும் முரண்பாட்டின் எச்சங் களாகவே இருந்து இலக்கிய வரலாற்றினைக் கடந்த நூருண்டு கால மாக எழுதி வருகிருர்கள். இந்த முரண்பாட்டின் கலவையாகவே மு. வ. வும் திகழ்கிருர்.

நாட்டு வரலாற்றினை எழுதுகின்றவனுக்கு மாந்தனியல், பண்பாட்டியல், கலையியல், புதைபொருளியல், மொழியியல், இலக்கிய வியல், அறிவியல் போன்ற அடிப்படை அறிவுகளுடன் உண்மை உணர்வும் அஃபார்வமும் எப்படி இன்றியமையாத தேவையோ அதைப் போல இலக்கிய வரலாற்றினை எழுதுகின்றவனுக்கும் இருந்

நூல்தான் இலக்கிய வரலாற்றினை எழுத முடியும். இல்லையேல் அவன், இனத்தின், மொழியின், இலக்கியத்தின் கடைகெட்ட பகைவனுவான்.

பேராசிரியர் மு. வ. வைப் பற்றி என்னிடம் இளமையில் இருந்த பற்றும் அன்பும் மதிப்பும் நாளாக நாளாக கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை ஆகிவிட்டன. தமிழின் பேரால் தமிழகத்தில் உலவுகின்ற தலை சிறந்த போலி இலக்கியவாணர் என்பதைத் தமிழிலக்கிய வரலாற்று நூலைத் தன் வாழ்நாளின் இறுதி நூலாக எழுதி உறுதி செய்து விட்டார். இதைச் சொல்கின்ற போது பலருக்குச் சினம் உண்டாகலாம். உண்மை சுடும் என்பதுதான் விடை.

பேராசிரியர் மு. வ. தான் எழுதத்தொடங்கிய காலத்திலிருந்தே வரலாற்றுத் திசையை நோக்கித் தம் கண்பார்வையை செலுத்தியதில்லை. கால ஆராய்ச்சி எல்லையில் தம் காலடிகளைப் பதிக்காமலே தள்ளி நின்று வளர்ந்தவர். அத்தகையவர் தம்மை உலகப் பெரியோர்களின் உண்மை அடிச் சுவட்டைத் தலைமேற் கொண்டொழுகுபவர் என்பதைக் கூருமல் கூறும் பெரியவர். அவர் நூல்களில், அவர் என்றும் அறிவுரை கூறும், 'அறவாழி'யாகவும் 'பேராசிரிய'ராக விளங்கி உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாதவராகவும் வருவார். தீமையின் நிழல் கூடத் தம் மேல்படாத தூயவராக விளங்குவர். அவர் தாம் தமிழிலக்கிய வரலாற்றை எழுதுகிற போது சாகித்திய அக்காதமியாரின் பக்கக்குட்டிச் சுவருக்குப் பின்னிருந்து தம் விருப்பு வெறுப்புக்களை, பகை உணர்ச்சியை, பழி உணர்ச்சியை, தனது அறியாமையை 376 பக்கமுள்ள நூலில் நல்ல பயிரிடையே களையை வளர்த்திருப்பது போல வளர்த்துக் காட்டியுள்ளார்.

முதலிலேயே ஓர் உண்மையைக் கூறிவிட வேண்டும். நூல் முழுதும் ஒரே மொழி நடையில் இல்லை. பகுதி தோறும் மொழி நடை வேறுபடுகிறது. கருத்துகள் முன்னுக்குப் பின் முரணுக பல இடங்களில் தலை நீட்டுகின்றன. விருந்திலே, இலையிலே இட்ட உணவாக இல்லாமல், திருமண வீட்டு விருந்துக்குப்பின் வெளியிலே எறிந்த இலைச் சோற்றையெல்லாம் கலந்தெடுத்தது போன்றுதான் மு.வ. வின் தமிழிலக்கிய வரலாற்று நூலின் நடையும் கருத்தும் உள்ளன.

தமிழனின் நாட்டு வரலாறும், இனவரலாறும் பண்பாட்டு வரலாறுந்தாம் சரியாக எழுதப்படாமல் இருக்கின்றனவே என்று

எண்ணுகிற நேரத்தில் தமிழிலக்கிய வரலாறும் அப்படித்தான் என்று அரசு உதவியுடனும் பதவி அதிகாரத்துடனும் மு. வ. தமது நூலை நம் முன் நீட்டுகிறார்.

எடுத்த எடுப்பிலேயே மொழியைப் பற்றியே சில தவறான கருத்துகளைக் கூறிச் செல்கிறார் (பக். 6 & 7). முதற்கோணல் முற்றும் கோணல் என்பதற்கு இந்நூல் ஒரு சான்றாகும்.

சேற்றிலே செந்தாமரை பூத்தது போலப் பழங்காலம், இடைக் காலம், இக்காலம் என்ற பாகுபாடு கொண்ட இந்நூலில், பழங்காலம் என்று குறிப்பிடும் கழக இலக்கியம் பற்றிய கட்டுரையும், நெறி நூல் காலம் என்ற கட்டுரையும் சிறப்பாக உள்ளன. இரட்டைப்பாவியம் என்ற பகுதியும் குறை என்று கூற முடியாது. ஆனால் சிலம்பும் மேகலையும் சமகாலம் என்பது உலகறிந்த பிழை.

பக்திப் பாடல்கள் என்ற பகுதியிலிருந்துதான் மு. வ. வின் வரலாற்று அறிவுக் கண் மங்கி ஒளிர்வதைக் காண முடிகிறது. பாவியப் பகுதியிலேயே கால ஆய்வின் காலடிகள் சறுக்கத் தொடங்குகிறதெனலாம். சிலம்பும் மேகலையும் ஒரு குடும்பக் கதையானாலும், இருவேறு புலவர்களால் பாடப் பட்டது எப்படி உண்மையோ அப்படியே இருவேறு காலத்தில் செய்யப்பட்டதும் உண்மை. இரண்டு நூலையும் இணைத்துப் படிப்பவர்க்கு விளங்கும். உண்மையான ஆராய்ச்சி அறிவுடைய மு. அருணாசலம் இதனை மெய்ப்பித்துள்ளார். பேரா. மு. அ. டி. கே. சி. போன்றோரை வெறும் கட்டுரை ஆசிரியர்களாகக் காட்ட நினைப்பது பேராசிரியருக்குப் பேரிழுக்காகும்.

அதைப்போலவே, தமக்கு வேண்டிய பின்னே பிறந்த மாணிக்க வாசகரை முன்னே தள்ளிவிட்டு, முன்னே பிறந்த ஆண்டாளைப் பின்னே தள்ளுகிறார். பெருங்கதைக்குக் காலம் கூறாததைப் போன்று அதன் உண்மையான அருமைகளைக் கூற மறுத்து விடுகிறார். சீவக சிந்தாமணிக்கு முற்பட்ட நூல் சூளாமணி என்கிறார். ஆனால் சீவக சிந்தாமணி பற்றிக் கூறும் போது தமிழில் தோன்றிய முதல் நிலை மண்டிலப் பாவினால் அமைந்த நூல் என்கிறார். சூளாமணி அப்பொழுது என்ன யாப்பென்பது மு. வ. விற்குத் தெரியவில்லை போலும். இங்கே மு. வ. வின் இலக்கண அறிவே ஐயத்திற்குரியதாகிறது.

கருத்துக்கு வேலை தராமல் செவிவழிச் செய்திகளுக்கே முதலிடம் கொடுத்துச் செய்வன திருந்தச் செய்யாக் கைகாரர் மு.வ. என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு: சேக்கிழாருக்குப் பிறகு—கம்பர் தோன்றியதாக எழுதியதோ டல்லாமல், தெள்ளத் தெளிவாகத் தெரியும் 12–ஆம் நூற்றுண்டு ஒட்டக் கூத்தரை 9-ஆம் நூற்றுண்டில் வாழ வைக்கிறுர். ஒட்டக் கூத்தர் மூன்று பேரரசர்களுக்குத்தாம் ஆசிரியராக வாழ்ந்தாரே தவிர மூன்று நூற்றுண்டுக்காலம் வாழவில்லை.

ஒரே பெயரில் பலர் வாழ்வதுண்டு. மு.வ. திருக்குறள் தெளிவுரை எழுதிய இக்காலத்திலேயே, திருச்சியிலே மற்றொரு வரதராசன் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். எப்படி இந்த இரண்டு வரதராசன்களும் ஒன்ருக மாட்டார்களோ அப்படியே கபிலர், அவ்வையார், பட்டினத்தடிகள், கம்பர் என்ற பெயரில் பல நூற்றுண்டுகளில் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்கள் எல்லாம் ஒருவரே என்று கூறுவது தமிழாய்வுத் துறையுள் உள்ளவர்களுக்கு அழகாகாது. கம்பரையும் இப்படிப் போட்டுக் குழப்பியுள்ளார் மு.வ.

மற்ரொரு பெரும் குறை—யாரைப் பற்றிக் கூற வந்தாலும் கம்பர் 'இக்காலத்தில்'தோன்றினர். சூளாமணி 'இக்காலத்தில்' தோன்றியது. அவ்வையார் 'இக்காலத்தில் பாடினர் என்று 'இக்காலம் இக்காலம்' எனக் கூறுவது எக்காலம் என்று நமக்குப் புரியவில்லை. நூல் கட்டுரைத் தலைப்பிலோ 300 ஆண்டு 200 ஆண்டு இடை வெளிகளைக் காட்டியுள்ளார்.

இப்படிக் குழப்புகிறுரே என்று நினைக்கிறபோது நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவர் பக்கத்தில் 16–ஆம் நூற்றுண்டு என்று துணிந்து 13–ம் நூற்றுண்டினரை மூன்று நூற்றுண்டு பின்னே தள்ளி மீண்டும் ஒட்டக் கூத்தனேடு ஒட்ட விடுகிறுர். (தொடரும்)

—நன்றி. முல்லைச்சரம்


# 'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வி

தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்!

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை–2.

சென்றவிதழ்த் தொடர்ச்சி:

# தென்மொழிக் கொள்கை.

## (தமிழகப் பிரிவினை)

# 2-ஆவது மாநாடு-மதுரை.

### (நிகழ்ச்சிச் சுருக்கம்)

இனி, (9—6—73) அன்று தடைமீறி ஊர்வலம் சென்று காவல் நிலையத்தில் சிறைப்பெற்ற எண்பது மறவர்களின் பெயர்களும், ஊர்களும் வருமாறு: 1 பெருஞ்சித்திரனுர் (மாநாட்டு அமைப்பாளர்) கடலூர். உ. அரசுமணி (மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்) மதுரை. 3 க. வெ. நெடுஞ்சேரலாதன் மாநாட்டுச் செயலாளர்) மதுரை. 4 அரசங்குடி சம்பந்தம் (வழக்குரைஞர்) திருச்சி. 5 மறை-நித்தலின்பன், கோவை. 6 அறவாழி, வெங்காலூர். 7 மகிபை-பாவிசைக்கோ, வெங்காலூர். 8 ப. முருகவேள், மதுரை. 9 பொற்செழியன், வெங்காலூர். 10 வேங்கையன், வெங்காலூர். 11 கா. தமிழரசன், முதுகுன்றம் (தெ.ஆ), 12 பொன்-மணிமொழி வாழைக் குறிச்சி. 13 கு. ஈகவரசன், பெரகம்பி. 14 அ. எழிலன்பன் கண்டராதித்தம். 15 உலகக்குடிமகன், கழுதக்குடி. 16 கோ. மனோகரன், இராசிபுரம். 17 இரா. அருட்குவை நெய்வேலி-3. 18 கரு. நட்வரசன், நெய்வேலி-3. 19 ப. அறிவழகன், சென்னை-2. 20 தா. இளந்திரையன், கொடும்பப்பட்டி. 21(ஆர்தர்) மாசிலாமணி, கலிக்கநாய்க்கன்பட்டி. 22 கி. அரிமா மகிழ்கோ, புதுவை-5. 23 அ.பூங்குன்றன். தளவாய்ப்பட்டணம். 24 ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம், 25 ப. துரையரசன், கைகாட்டிப் புதூர். 26 ப. கு. முருகவேள் புன்செய்ப் புளியம்பட்டி. 27 த. அன்பழகன் கடலூர்-1. 28 நாவை-சிவம் (தமிழ்மகன்) கொடும்பாவூர். 28 அ. தெ. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 29 செ. புத்தன், சென்னை-2. 30 மு. மகிழரசன் சென்னை-24. 31 கல்லை-அருட்செல்வன் கெ. கல்லுப்பட்டி. 32 தாமரை-பெருஞ்சித்திரன் கடலூர்-1. 33 மா. தேன்மொழி கடலூர்-1. 34 மா. செந்தாழை, கடலூர்-1. 35 மா. பிறைநுதல் கடலூர்-1. 36 மா. பூங்குன்றன், கடலூர்-1. 37 மா. பொழிலன் கடலூர்-1.

38 இறை. பொற்கொடி மதுரை-10. 39 புலவர். இறைக் குருவனூர் மதுரை-10. 40 செம்பியன், சென்னை-2. 41 கோ. மு. பரண் ஆக்கன், சென்னை-2. 42 துரைசாமி, திருப்பூர். 43 சேது ராமசாமி கைகாட்டிப்புதூர். 44 அ. துரைசாமி, அவிநாசி. 45 ச. சின்னத்துரை, சிவபுரம். 46 வை. தமிழ்க்குமரன், திருவாரூர். 47 ஆ. மதியழகன் திருவாரூர். 48 கா. இராவணன் கூடலூர். 49 பழங்கரைவேள், பழங்கரை. 50 மதன்மோகன், மதுரை-1. 51 இல. திருமுகம், தென்குலம். 52 இரா. திரை வேந்தன், அ. இலக்குமிபுரம். 53 தே. அரசன், மதுரை-10. 54 நா. இளமாறன், பெகும்பகல்லா. 55 சு. ம. முருகுவேந்தன். மதுரை. 56 சி. இராசாங்கம். தஞ்சை. 57 உ. ச. எழில், வாழ் வாங்கி. 58 அன்பு. ந. வை. இளஞ்செழியன், அம்மையன்பட்டி. 59 வே. மு. பொதியவெற்பன், குடந்தை. 60 ந. அரண முறுவல், நாயனூர்பாளையம். 61 புலவர் சா. அடல்எழிலன், திருவையாறு. 62 இர. முத்தையன் தீபாமங்கலம். 63 குன்னத் தூர். ச. தம்பி, சென்னிமலை. 64 க. தமிழப்பன், திருப்பூர்-4. 65 பூபதி (வேங்கையன்) சோலையார்பேட்டை. 66 அருள் வேட்டன், கண்ணூற்று. 67 ஓடை-தமிழ்ச்செல்வன் மேலூர். 68 கதிரவன், உரத்தநாடு. 69 ஒளி-மலரவன் வெங்காலூர். 70 சேரலாதன் வெங்காலூர்..............

(இப்பட்டியலில் பத்துப் பெயர்கள்விடுபட்டுள்ளன. அவர்களின் பெயர்கள் எங்களுக்குக் கிடைக்க வில்லை. எனவே ஊர்வலத்தில் கலந்து கொண்டு, 9—6—73 அன்று காவல் நிலையத்தில் சிறைப் பட்டு இறுதி முறையாகப் பெயர்ப்பதிவு செய்து கொண்டவர்கள் தங்கள் பெயர்களையும் முகவரிகளையும் தெரிவிப்பார்களாயின், அவை அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.)

அடுத்து, பிற்பகல் மாநாட்டு நிகழ்ச்சியும் காவல் நிலையத்தி லேயே நடந்தது. திரு. நா. இளமாறன் மீண்டும் தம் விடுதலை யுணர்வுப் பாடல்களைப் பாடினார். திருச்சி வழக்குரைஞர் அ. மு. சம்பந்தம் பிற்பகல் நிகழ்ச்சியை முன்னின்று நடத்தினார். குறிப் பிட்ட வேளையில் வர வியலாமையால் காலையில் நடந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளவும், காவல் நிலையத்தில் தளைப்படவும் இயலாத தஞ்சைப் புலவர் திரு. த. (சரவணத்) தமிழனாரும், காரைக்குடிக்

கல்லூரிமாணவர் திரு. மா. ஆடலரசும், புதுவைக் கல்லூரி மாணவர் ப. அடியார்க்கருளியும் பிற்பகல் மாநாட்டில் தொடக்கத்தில்பேசினர். (இம் மூவரும் காலங் கடந்து வந்தும் காவல் நிலைய அதிகாரிகளிடம் சென்று தங்கள் பெயர்களையும் பதிவு செய்து கொண்டு சிறைப்படுத்துமாறு வேண்டினர். ஆனால் ஊர்வலத்தில் வந்தவர்களை மட்டுமே நாங்கள் சிறைப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் அறவே மறுத்துவிட்டனர்.)

திரு. தமிழனூர், தாம் காலங் கடந்து வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டு தளைப்படுத்தப் பெருமைக்கு வருந்தியும், மாநாட்டுப் பெருமைகளை விரித்தும் பேசினூர். திரு. ஆடலரசு விடுதலையுரையாற்றினூர். திரு. அடியார்க்கருளி தமிழின் பெருமைபற்றிக் காவலர்களுக்கு மிகத் தெளிவாகச் சுவைபட எடுத்துக் கூறினூர். காவலர்கள் மிக நெருக்கமாக வந்து நின்று மிக ஆர்வத்துடன் கேட்டனர். அதன்பின்னர் திருவாளர்கள் க. வெ. நெடுஞ்சேரலாதனும் அருட்குவையும் தமிழரின் அடிமைத்தனம் பற்றியும், இந்திராவின் ஆட்சிபற்றியும் பேசினர். திரு. மறை. நித்தலின்பன் அறம் வெல்லும் என்று பேசினூர்.

வழக்குப் பதிவு பெறவிருந்த எண்பது பெயர்களையும் சிறைக்குக் கொண்டு சென்று காவலில் வைக்கின்ற நிலை ஏற்படவிருந்ததால், காவல் அதிகாரிகள் உள்ளே இருப்பவர்கள் தம் தம் உடைமைகளையும், விலை மதிப்புள்ள பொருள்களையும், பணங்களையும் வைத்துக் கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு இருந்தால் அவர்கள் வெளியிலுள்ள பொறுப்பானவர்களிடம் கொடுத்துவிடலாம் என்றும் கூறினர். அதன்படி அன்பர்கள் வரவழைக்கப் பெற்றனர், அவர்களிடம் எல்லாருடைய பணம், பெட்டி, துணி முதலிய பொருள்கள் பெண்களின் நகை நட்டுகள் முதலியவை வைப்பகத்திலோ வேறிடத்திலோ வைத்திருக்குமாறு ஒப்படைக்கப் பெற்றன.

இதற்கிடையில் அதிகாரிகள் பரபரப்போடு இயங்கியில் வெளியே போவதும் வருவதுமாக இருந்தனர். அடிக்கடி தொலைபேசித் தொடர்புகள் நிகழ்த்தப் பெற்றன. மாலை 6 மணியளவில் அதிகாரி ஒருவர் மாநாட்டு அமைப்பாளரை அழைத்து, எல்லாரும் விடுதலை செய்யப் பெற்றனர் என்று கூறி, எல்லாரையும் அமைதி

யாகக் கலைந்து போக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டார். அச்செய்தியை அமைப்பாளர் அன்பர்களிடம் தெரிவித்து, எல்லாரும் அமைதியாகக் கலைந்து செல்ல வேண்டிக்கொண்டு, அன்று இரவு 9 மணிக்கு அப்சரா விடுதியில் பொதுக்குழுக்கூட்டம் நடக்கு மென்றும்; அக்கூட்டத்திற்கு அன்பர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுமென்றும்; அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி அங்கு ஆராயப் பெறும் என்றும் சொன்னார். அதன்பின் விடுதலை முழக்கங்களுடன் விடுதலை மறவர்கள் காவல் நிலையத்தை விட்டு வெளியேறினர்.

இரவு 9-30 மணியளவில் பொதுக்குழுக் கூட்டம் அமைப்பாளர் பெருஞ்சித்திரனார் தலைமையில் கூடியது. மறுநாள் மாநாடு நடத்துவதா வேண்டாவா என்ற கருத்துப் பற்றித் தனித்தனியே ஒவ்வொருவரிடமும் கேட்கப் பெற்றது. விடுதலையுணர்ச்சி உள்ளவர் களின் மனநிலைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதே அதன் நோக்கம். பொதுக்குழுக் கூட்டத்திற்கு வந்திருந்த அறுபது பெயர்களில் ஐம்பத்தைந்து பெயர்களே மறுநாள் எப் படியும் மாநாட்டை நடத்தியே தீரவேண்டும் என்று உணர்ச்சியுடன் முழங்கினர். ஐந்து பெயர்கள், இக்காலம் நமக்குக் கருத்தறிவுப்புக் காலம் என்றும், எனவே நாம் போராட்டத்தில் கவனம் செலுத்தக் கூடாதென்றும், அது போராட்டக் காலத்தில் நடைபெற வேண்டிய ஒன்று என்றும், கூறினர். அமைப்பாளர் அவர்கள் இருசாரார் கருத்தையும் அமைதியாகக் கேட்டிருந்து விட்டு, "எதிர்க் கருத்துகள் சிறுபான்மையினரால் கூறப் பெற்றாலும், நான் அவற்றில் மிகவும் கவனம் செலுத்துகின்றவன்; அவற்றை ஆராய் கின்றவன். ஒரே ஒருவர் நம்மில் மாறுபட்டாலும் கூட அவர் மாறு படுவது ஏன் என்னும் விளக்கத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்வ- திலே நான் அக்கறையுள்ளவன். அவர் நம் கருத்துகளை விளங்கிக் கொள்ள வேண்டு மென்பதற்காக அவற்றைப் பலவாறு விளக்க அணியமாக விருக்கின்றவன். பெரும்பாலும் நாம் எல்லாரும் அப்படித்தான் இருக்க வேண்டும். ஒருவர் மாறுபட்டாலும் அவரைப் புறக்கணிக்கக் கூடாது. கூடிய வரையில் அவரையும் இணக்கத் திற்குக் கொண்டுவரவே முயல வேண்டும். இப்பொழுது மாநாட்டைத் தொடர்ந்து நடத்துவதில் நமக்குள் மாறுபாடான கருத்து இருக்கக் கூடாது. மாநாட்டை நடத்துவதா இல்லையா, எங்கு, எப்படி

நடத்துவது என்பது நாளை காலையில் செய்யப்பெறும் ஒருசட்ட முயற்சிக்குப் பின் அன்பர்களுக்கு அறிவிக்கப்பெறும். இது கொள்கைப் பரப்புக் காலந்தான் என்பதை அறிவேன். இப்பொழுதும் நாம் கொள்கையைப் பரப்புவதற்குத்தான் மாநாடுகளை நடத்துகின்றோம். நாம் திருச்சி மாநாட்டில் தீர்மானித்துக் கொண்டபடி இக் கொள்கைப் பரப்புக் காலத்தில் சரிவரச் செயல்படாமைக்குக் கரணியம் பொருளியல் வலிமை யின்மையே! பொருளை வைத்துக் கொண்டிருப்பவர்களெல்லாம் இதில் ஈடுபடத் தயங்குகின்ற பொழுது, பொருளில்லாத நிலையில் நாம் இவ்வாறு ஈடுபடுவது கூட, மிகப் பெரிய செயல்தான். 'நாடு பிரிய வேண்டும்' என்று கருத்தறிவிக்கவே எல்லாரும் அஞ்சுகின்ற காலத்தில், நாம் பிரிவினை மாநாடு என்று வெளிப்படையாகக் கூட்டுவது மிகவும் அரிய செயல் என்பதை நீங்கள் உணர வேண்டும். எனவே. அன்பர்கள் சிலர் குறைப்பட்டுக்கொண்டது போல், கொள்கைப் பரப்புக் காலத்தில் நாம் சரிவரச் செயல்பட வில்லையே என்றும் எவரும் மனச் சோர்வு கொள்ள வேண்டாம். முதலில் நம்மை அந்நிலைக்குப் பக்குவப் படுத்திக் கொள்வதும் ஒரு முயற்சிதான். இன்று நம் ஊர்வலத்தின் முடிவில் நடந்த சில தொய்வுகளைப்பற்றி அறிவீர்கள். நாம் முனைப்பாளர்கள். நாம்தாம் கொள்கைகளைப் பரப்ப வேண்டும். நமக்குள்ளேயே சிலர் தெளிவற்று இருக்கின்றார்கள். அவர்களுக்கும் நாம் தெளிவேற்ற வேண்டும். அதுவும் ஒரு முயற்சியே! சும்மா வாயளவில் கொள்கையைச் சொல்லிக் கொண்டிருப்பது வேறு. செயலளவுக்கு அதைக் கொண்டுவருவது வேறு. செயலுக்கு வரும்பொழுது அதில் பலவகையான இழுப்பு பறிப்புகள் இருக்கவே செய்யும். அஃது அவரவர் மன நிலைகளைப் பொறுத்தது. கொள்கைப் பரப்புக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபடவேண்டா என்று அன்பர் சிலர் கேட்டுக் கொண்டனர். உண்மைதான். நாம் இப்பொழுதுங்கூட கொள்கையைப் பரப்புவதற்குத்தான் மாநாட்டைக் கூட்டினோம் இது போன்ற மாநாடுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் கவனமும் அரசினர் கவனமும், செய்தித்தாள்களின் கவனமும் நம்பக்கம் திரும்பும். அப்பொழுதுதான் நாம் சொல்வதை அவர்கள் எண்ணிப் பார்க்க முயற்சி செய்வர். அந்த முயற்சியைத்தான் நாம் இப்பொழுது செய்தோம். அதற்குத் தான் இப்பொழுது தடையிட்டிருக்கின்றார்கள். மாநாடு நடைபெற விருந்த மன்றம் சாத்திப் பூட்டி முத்திரையிடப் பெற்றுக் காவலர்

களால் காக்கப் பெற்று வருகின்றது. நம்மை அமைதியாக ஊர்வலம் நடத்தவும், மாநாட்டை நடத்தவும் விட்டிருந்தார்களானால் இந்த மதுரையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அப்படி நடைபெறுவதை இந்த அரசு விரும்பவில்லை போலும்! கொள்கையைப் பரப்பும் முயற்சியில்தான் ஈடுபட்டோம்; போராட்டத்திலன்று. ஆனால் அதற்கே இப்பொழுது தடையிடப் பெற்றுள்ளது. **கொள்கை பரப்பப்படும் பொழுது அது தடுக்கப் பெறுமானால் அதனை மீறுவதும் ஒரு முனைப்பான கொள்கை பரப்புச் செயலே யாகும்; போராட்டம் ஆகாது.** எனவே அன்பர்கள் எதற்கும் அணியமாக விருக்க வேண்டும். நாளை காலை 9-மணிக்கு மேற்கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவாக அறிவிக்கப் பெறும். அதுவரை அன்பர்கள் பலருடைய உணர்ச்சியையும் நான் நன்கு அறிவேன். சிலர் இப் போராட்டத்தி லீடுபட்டு எத்தனை ஆண்டுகளேனும் சிறைக்குச் செல்ல அணியமாக விருக்கின்றனர் என்றும் எனக்குத் தெரியும். சிலர் கூட்டத்தோடு வந்து விட்டோமே, நடவடிக்கைகள் கடுமையாக விருந்தால் என்ன செய்வது என்று அலமருகின்றதையும் அறிவேன். அனைவரும் காலை வரை பொறுத்துக் கொள்ளுங்கள். காலையில் எல்லாம் தெரிந்து விடும். நீங்கள் இப்பொழுது அமைதியாகப் போகலாம்'' என்று விரிவாக எடுத்துரைத்தார். இரவு $11\frac{1}{2}$ மணியளவில் கூட்டம் முடிவுற்றது. அதன்பின் 'கைகாட்டி' ஆசிரியர், திரு. தமிழ்க் குடிமகனும் உடுமலைப்பேட்டை திரு. இறையனும் வந்து, அமைப்பாளர் பெருஞ்சித்திரனார் அவர்களைப் பார்த்துப் பேசிச் சென்றார்கள். இருவரும் மாநாட்டுச் செய்தி மிகவும் பரபரப்பூட்டி யிருப்பதாகவும், அரசுவரை எட்டியிருப்பதாகவும் சொன்னார்கள். அன்றையச் செய்தி அன்றையமாலை வெளியீடுகளிலும், மறுநாளைய காலை வெளியீடுகளிலும் வந்திருந்தன. 'தினத்தந்தி' 'மாலைமுரசு' தமிழ் முரசு, தினமணி, அலைஓசை, தினமலர், நவசக்தி, THE INDIAN EXPRESS, HINDU முதலிய எல்லாத் தாள்களிலும் செய்தி பெரிய அளவில் போடப் பெற்று நன்கு விளம்பரம் ஆகி யிருந்தது. அவற்றில் 'அலை ஓசை' என்னும் செய்தித்தாள் ஒன்று தான் செய்தியை நடந்தது நடந்தவாறே ஓரளவு உண்மையாகவும் விரிவாகவும், நடுநிலையோடும் முதன்மை கொடுத்து எழுதியிருந்தது. பிறதாள்கள் அனைத்திலும் செய்திகள் திரிக்கப் பட்டும், மாற்றப் பட்டும், குறைக்கப் பட்டும், மறைக்கப்பட்டும் வெளியிடப் பெற்றிருந்தன. 'தினத்தந்தி' தனக்கேயுரிய முறையில், மதுரை

யில் திராவிடக் கழகத்தினர் 92 பேர் கைது'' என்று புளுகியிருந்தது. 'தினமணி'யும் அதற்கு ஒத்தூதியிருந்தது. அது 'தென்மொழி' ஆசிரியர் என்பதற்குத் 'தமிழ்மொழி' ஆசிரியர் என்றும், 'தென்மொழிக் கொள்கை மாநாடு' என்பதைத் 'தமிழ்மொழி அபிவிருத்தி மகாநாடு' என்றும் வெளியிட்டிருந்தது, அதற்கு இயல்பாகவுள்ள பார்ப்பனக் குறும்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக விருந்தது. தென்மொழி என்னும் பெயரைச் சொல்லவும் ஆரியப் பார்ப்பனர்கள் நாக்கூசுகின்றனர் என்று அதனால் தெரியவருகின்றது. 'மாநாடு' என்பதைக் கூட மகாநாடு என்று எழுதி நிறைவடைகிறார்கள் அவர்கள் என்பதை நம் 'அடிமை'கள் கவனித்தால் நல்லது. இந்து ஆங்கில ஆரிய நாளிதழ், 'தளைப்பட்ட ஒருசிலர் பிணையல் (BAIL) கொடுத்து வெளி வர முயற்சிச் செய்ததாக'ச் செய்தியையே களங்கப் படுத்தி யிருந்தது.

திருச்சியிலிருந்து வெளிவரும் 'தினமலர்' என்னும் இதழ் 'தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டுவோம்' என்னும் முழக்கத்தைத் ''தெள்ளிய ஆட்சிக்கு எல்லைகட்டுவோம்' என்று முழங்கிய தாகச் செய்தி வெளியிட்டிருந்தது. தில்லிக்கும் தெள்ளிய என்பதற்கும் வேறுபாடும் பொருளும் கூடத் தெரியாமல் தமிழ் நாட்டில் தமிழ் மக்களிடத்தில் நடத்தப்பெறும் தமிழ் நாளிதழ்களின் ஆசிரியர்களை நினைத்துச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. நவசக்தி (பெரிய பெரிய அளப்புகளையெல்லாம் அளப்பது) 'பெருஞ்சித்திரனாரைப்' 'பெருஞ்சித்தனார்' என்று எழுதி யிருந்தது. மற்றும் ஒவ்வொரு செய்தித்தாளும் தளைப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு வகையாகக் குறித்திருந்தது இன்னும் வியக்கத்தக்க செய்தியாம். அலைஓசை 90 பேர்கள் அவர்களுள் 5 பெண்கள் என்று எழுதியிருந்தது. தினந்தந்தி 92 பேர்கள் அவர்களுள் 5 பேர் பெண்கள் என்று எழுதியிருந்ததுடன், அவர்கள் திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்று 'மிகவும் ஆராய்ந்து' கண்டதுபோல் எழுதியிருந்தது. மதுரைத் தமிழ்முரசு 100 பேர் என்றும் அவர்களுள் பெண்கள் 10பேர் என்றும் எழுதியிருந்தது. திருச்சி தினமலர் 4 பெண்கள் உட்பட 100 பேர் என்று வெளி யிட்டிருந்தது.

நம் நாட்டில் உள்ள செய்தித்தாள்கள் எவ்வாறு பொறுப் பில்லாமல் செய்திகளை வெளியிடுகின்றன என்பதை உணர்த்தவே

இந்நிலைகளையெல்லாம் இங்குத் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. எத்தனைப்பேர் சிறைப்படுத்தப்பட்டனர் என்பதைக்கூட அவை முறையாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள முயலாமல் கேள்விப்பட்டதை வைத்துக்கொண்டே செய்திகள் வெளியிடும் தாள்கள், நாட்டுமக்கள் நலனில் எவ்வாறு அக்கறையுடன் நடந்து கொள்ள முடியும் என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. இதில் இன்னொரு வியப்பான செய்தி என்னவென்றால், திராவிடர் கழக நாளிதழும், தமிழ்நாட்டுப் பிரிவினைக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்வதும், விடுதலை என்னும் பெயரிலேயே இயங்குவதும், **பெரியாரின்** சொந்த விதழாக உள்ளதும் **'தமிழ்நாடு தமிழருக்கே'**— என்னும் முழக்கத்தைத் தலைப்பிலிட்டு வெளி வந்து கொண்டிருப்பதும், பிற மாநிலத்து எழும் விடுதலை உணர்வுக்கு ஆக்கங் கொடுத்துக் கொண்டிருப்பதும், கி. **வீரமணியால்** இயக்கப் பெறுவதுமாகிய விடுதலை என்னும் நாளிதழும், **முரசொலியுந்தாம்** இந்த மாநாட்டுச் செய்திகளை ஒருவரிகூட போடவில்லை. அவற்றிற்கு இம்மாநாடும் மாநாடில்லை; அதன் செய்தியும் செய்தியில்லை என்பது கருத்துப் போலும்! தமிழரின் எதிர்காலம் பற்றி இவற்றின் கருத்து என்னதான் என்பதை அந்தக் காலமேதான் முடிவு கட்ட வேண்டும். இன்னும் இதைவிட வியப்பான செய்தி ஒன்று உண்டு. அதுதான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்ற விருந்தவரும், முதன் முதல் பிரிவினை முழக்கங்களை முழங்கியவரும், மதுரை மாநாட்டு ஊர்வலந் தொடங்குவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பு வந்து ஊர்வலத்தை ஊக்கிவிட்டுச் சென்றவரும் ஆகிய அருமைத் தலைவர் பெரியார் மதுரையில் மறுநாள் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், **'மதுரை விடுதலை மாநாட்டை நடத்தியவர்கள் யாரோ ஊர் பேர் தெரியாதவர்கள்**, என்றதும், **'அவர்களுக்கும் எங்களுக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை என்றதும்!** இவற்றிற்கெல்லாம் ஒட்டுமொத்தப் பெயர்தானே **'அரசியல்'** என்பது. (தொடரும்)

---

*தமிழ்மொழி, வரலாற்றுப் புரட்சி நூல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்தில் நீங்கள் பெருமைமிகும் ஓர் உறுப்பினரா? இல்லெனில், இன்றே உறுப்பினராகுங்கள்!*

**விளக்கங்கட்குத் தென்மொழிக்கு எழுதுங்கள்.**



# நூறாசிரியம்.

## பெருஞ்சித்திரன்.

பாட்டு: ௩௨.

இவனியா ரென்குவி ராயி னிவனே
பேராய மென்னும் பெரும்பெயர்க் களிற்றை
ஆரமர்க் களத்தே அலறக் கிடத்தி
ஊராயத் திருத்தி உருக்குலைத் திட்டுத்
தமிழக வரசைத் தலைமுதல் நிறுத்திய
அமிழா நெடும்புகழ் அண்ணாத் துரையே!
அடித்தலை தாழ்த்தித் தமிழ்கொல் தில்லியின்
முடித்தலை நெரித்த மொய்ம்பிவன் மொய்ம்பே!
இமிழ்கடல் வையத்தி யாண்டும் புகழ்கொளத்
தமிழ்விழ வெடுத்த திறலிவன் திறலே!
மடம்படு கொள்கை மறித்துயிர்ப் படக்கி
உடம்பட நிறுத்திய விறலிவன் விறலே!
புறம்பொய்த் தொழுகிய புல்லியர் விதிர
அறம்பெறத் தூக்கிய அரசிவன் அரசே!
தற்சார் புற்ற இளையோர்ப் பிணிக்குறுஞ்
சொற்சோர் வறிகிலா வினைவலி சூழ்தலின்
தோலா திடுகவன் றேரே;
கானிலை கொள்ளுக செந்தமிழ்க் கழலே!

பொழிப்பு:

(படிவமாய் நிற்கும்) இவன் யார் என்று கேட்பீர் ஆயின், இவன், பேராயம் என்னும் பெரும் புகழ் சான்ற, களிறு போல்வதாம் ஒரு கட்சியைத் தேர்தல் என்னும் நிறைவுற்ற போர்க் களத்தே தோற்றுப் புலம்பும்படி வீழ்த்தி, ஊர்மக்கள் நடுவே கொணர்ந்து நிறுத்தி, அதன் பொய்யுருவத்தைக் குலைத்து உண்மை உருவம் புலப்படும்படி செய்து, வரலாற்றுன் முன் இழந்த தமிழகம் என்னும் பெயரை மீட்டு, அதன் பெயரால் ஓர் அரசை முதன் முதல் அரும்பாடு பட்டு எடுத்து நிலைநாட்டியோனும், காலவெள்ளத்துள் அமிழ்ந்து போகாத நெடிய புகழ் கொண்டோனும் ஆகிய அண்ணாத்துரை

என்னும் பெயரினனும். தன் அடியின் கீழ்த் தலைமைசான்ற தமிழ் மொழியை வலக்காரத்தால் தாழ்த்தி, அதனை நாள்தொறும் சிறிது சிறிதாக அழித்து நின்ற தில்லி யாட்சியின் அதிகாரம் நிரம்பிய தலைமைச் செருக்கைத் தன் வெற்றியால் நொறுக்கிய வலிமை இவனுடையது. ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இவ் வுலகின்கண் எக் காலத்தும், எவ்விடத்தும் தன் புகழ் நினைவு கொள்ளும்படி தமிழ் மொழிக்கென்று பதினொரு நாட்கள் விழா வெடுத்த துணிவு இவனுடையது. மடமை நிரம்பிய மூடக் கொள்கைகளைத் தடுத்து, அவை மீண்டும் கிளையா வண்ணம் ஒடுக்கி அறிவுக்கு உடன் பட்டுப் போமாறு மக்களை நிறுத்திய பெருமை இவனுடையது. வெளிப்படையாகவே பொய்ம்மை கூறி யொழுகிய சிறுமையர் நடுங்கும்படி, அறம் தழுவியவாறு நிறுவப் பெற்ற அரசு இவனுடையது. தன் சார்பினராகிய இளைஞர்கள் கட்டுப்படும்படி சொல்தளர்வு அறியாத உரையாற்றலொடு வினை வலிமையும் சூழ்ந்திருத்தலின் இவன் முயற்சிகள் தோல்வி யின்றி விளங்குமாக! இவனின்று தொடங்கிய செந்தமிழ் வெற்றியின் அடி அசைவின்றி நிலைபெறுமாக!

விரிப்பு:

இப்பாடல் புறத்திணையைச் சார்ந்தது.

"இப் படிமத்து நிற்கும் இவன் யார்?" என்று சதுக்கம் ஒன்றில் நின்றிருந்த அண்ணாத்துரையின் படிமத்தைப் பார்த்துக் கேட்ட வழிப்போக்கற்கு விடையாகக் கூறியதாகும் இப்பாட்டு.

"தமிழ் மரபு தாழ, இருபதியாண்டுகள் வடநாட்டினரின் தில்லி யாட்சிக்குக் கையாளாக நின்று, தமிழ் நிலத்தை ஆட்சி செய்த பேராயக் கட்சியின் வலிமையைத் தாழ்த்தி, அரசைத் தேர்தல் வழிக் கைப்பற்றி, மதராசு என்று வழங்கி வந்த இந்நாட்டிற்குத் தமிழ் நாடு என்னும் பெயரைச் சூட்டிய பெருமையும், ஆட்சி வெறியில் மேலேறி நின்ற தில்லியின் அதிகாரச் செருக்கை நொறுக்கிய வலிமையும், தலைநகரில் பதினொரு நாட்கள் உலகத்தமிழ் விழா வெடுத்துத் தமிழ்மொழிக்குப் பெருமை சாற்றிய துணிவும், தன் கருத்து வலிமையால் மூடக் கொள்கைகளை மூறியடித்த திறமையும், எவர்க்கும் கட்டுப்படா இளைஞர்களைக் கட்டுப்படுத்திய சொல் வன்மையும் வினைவலிமையும் கொண்ட அண்ணாத்துரையென்னும்

விறலோனுடையதாகும் இப்படிமம்" என்று விடையாக மொழிந்தது இது.

பேராயம் எனும் பெரும் பெயர்க் களிறு: பேராயம் (congress) என்னும் புகழ்வாய்ந்த கட்சி. கட்சிகளுள் அஃது ஒரு களிறு போல்வதாகலின் பெரும் பெயர்க் களிறு என உருவகிக்கப்பெற்றது.

ஆரமர்க்களம்: நிறைந்த போர்க்களம். குடியரசமைப்பில் தேர்தலே போர்க்களம் போன்றதாகலின், அதன் வெற்றி தோல்வியே ஓர் அரசு அமைவதற்கும், சரிவதற்குமான அடிப்படைகளாம். ஆர்தல்-நிறைதல். பொருந்துதல். நிறைந்த அமர்க்களம் என்றது பொதுத் தேர்தலே.

அலறக் கிடத்தல்: புலம்ப வீழ்த்துதல். பேராயக்கட்சி ஒரு களிறு போல்வதாகலின், அதைப் புலம்பி யழும்படி அடித்து வீழ்த்தி-எனலாயிற்று.

ஊராயத் திருத்தி. ஊர்மக்கள் நடுவில் நிறுத்தி.

உருக்குலேத்திட்டு: அதன் பொய்யுருவைக் குலேத்து மெய் யுருவைக் காட்டி.

பேராயக்கட்சி தமிழ்மொழி வளர்ச்சிக் கெதிராக இந்தி நுழைப் பையும், தமிழின வளர்ச்சிக்கெதிராக ஆரியவின மேம்பாட்டுக்கான வற்றையும், தமிழ்நாட்டு வளர்ச்சிக்கு எதிராக வட நாட்டினர்தம் மேலாண்மைக்கு வழி வகுக்கவும் செய்ததெனினும், அது மக் களிடையில் தன்னே ஒரு நடுநிலேக் கட்சியென்றும், மக்கள் முன்னேற்றத்திற்கே உழைக்கும் தன்மை வாய்ந்ததென்றும் போலிக் கொள்கை கூறி அவர்கள் நம்பும்படி செய்தது. இப் பொய்ப் புனேவைத் தோலுரித்துக் காட்டி, அதன் புரட்டுகளே அம்பலப் படுத்தியது அண்ணுத்துரையவர்கள் தலேமையாக நின்று இயக்கிய திராவிட முன்னேற்றக் கழகமே யாகலின், ஊராயத் திருத்தி உருக்குலேத்திட்ட பெருமை அவரையே சாருமென்க.

தமிழக அரசைத் தலேமுதல் நிறுத்திய....அண்ணுத்துரையே

பேராயக் கட்சி தமிழ்நாட்டரசை தி.பி.1978 (கி.பி. 1947)-இல் மேற்கொண்டது. அதை அண்ணுத்துரை அவர்கள் தி. பி. 1998 (கி.பி. 1967)-இல் பொதுத்தேர்தல் வழிக் கைப்பற்றினுர். அவரின் முதல் நடவடிக்கையாகத் தமிழ் நிலத்திற்கு அதுவரை இருந்த

மதராசு மாநிலம் என்ற பெயரை மாற்றித் தமிழ்நாடு என்னும் பெயரை அமைத்தார். இப் பெயரே மூவேந்தர் காலத் தமிழாட்சியில் இடப்பெற்றிருந்தது. ஏறத்தாழ எண்ணூறாண்டுக் காலத்திற்குப் பின் மீண்டும் முதன் முதல் அப் பெயரைத் தமிழகத்திற்கு ஆக்கித் தந்த வரலாற்றுப் பெருமை அண்ணாத்துரை யவர்களையே சார்ந்த தாகலின் தமிழக அரசைத் தலை முதல் நிறுத்திய அமிழா நெடும் புகழ் அண்ணாத்துரை எனக் கூறலாயிற்று.

அடித்தலை தாழ்த்தி..........மொய்ம்பே : உலக மொழிகளுக் கெல்லாம் பழமையானதும், இயற்கையானதும் தாயானதும் தலைமை சான்றதுமான தமிழ் மொழியை, ஆட்சி யதிகார மேலாண்மையாலும் வலக்காரத்தாலும் தன் அடியின் கீழ்ப் படுத்தி, வடமொழி யாகிய சமற்கிருதத்தை ஊக்குவிப்பதாலும், மிகப் பிந்திய காலத்தேதோன்றி யதும், பன்மொழிக்கலவை மிக்கதும், செயற்கையானதும், ஆட்சிக் கென உருவாக்கிக் கொண்டதும் வட இந்தியாவில் வழங்கி வருவது மாகிய இந்தியெனும் பயனற்ற ஒரு மொழியைத் தென்னகத்து மக்க ளிடை வலிந்து புகுத்துவதாலும், நாளுக்கு நாள் சீரழித்து வருகின்ற தில்லியரசின் போக்கை, தன் வலிந்த இந்தி யெதிர்ப்புணர்ச்சியாலும் இருமொழிக் கொள்கையாலும் முறியடித்த மொய்ம்பு அண்ணாத் துரையின் ஆட்சியினது என்க. மொய்ம்பு–வலிமை. தமிழ்கொல் தில்லி என்றமையின் அக்கொல்வதாந் தன்மை தொடர்வதாம் நிலை உணர்த்தப் பெற்றது.

இமிழ்கடல்.... வையத்து......திறலே: அண்ணாத்துரையின் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த மறு ஆண்டான தி. பி. 1999 (கி.பி. 1968)–இன் தொடக்கத்திலேயே உலகத் தமிழ் விழாவை உலகமெலாந் தழுவிய அளவில் தமிழ்நாட்டின் தலை நகராகிய சென்னையம்பதியில் சிறப்புறக் கொண்டாடியது. இவ்விழா சனவரி 3-ஆம் பக்கலிலிருந்து 11–ஆம் பக்கல் வரை கொண்டாடப் பெற்றது. இவ் விழாவில் தமிழகத்தினின்றும், பல வெளிநாடுகளி லிருந்தும் ஏறத்தாழப் பத்திலக்கம் மக்கள் வந்து கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கு ஏறத்தாழ ஓரிலக்கம் உருபா செலவிடப் பெற்றது. இவ் விழாவின் ஒரு பகுதியாக நடந்த அறிஞர் கருத் தரங்கில் நூற்று ஐம்பத்து மூன்று கட்டுரைகள் படிக்கப்பெற்றன.

அவை, ஏறத்தாழ இருபத்தேழு நாடுகளிலிருந்து வந்த பேறிஞர் களால் படிக்கப் பெற்றவை யாகும். இவ் விழாவின் பொழுதுதான் சென்னைக் கடற்கரையில் திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், ஔவையார், முதலிய முற்காலப் பிற்காலச் செந்தமிழ்ப் புலவர்களின் பதினொரு படிமங்கள் நிறுவப்பெற்றன. இவ்வளவு சிறப்புறும்படி மொழிக்கென எடுத்த வேறு ஒரு விழா உலகிலேயே இல்லை. இதன் வழி அண்ணாத்துரை அவர்களின் அரசு தமிழின் பெருமையை உல கெல்லாம் பறைசாற்றியது. வடவரின் தில்லி யாட்சி யதிகாரத்தின் கீழும், வடமொழியாளரின் சூழ்ச்சிகளுக்கிடையிலும் இத்தகைய ஒரு விழா வெடுத்தது மிகத்துணிவான செயலாகும். அத்துணிவு அண்ணாத்துரையினுடையதே என்று இவ் வரிகளில் பாராட்டப் பெற்றது என்க, திறல்– வலிமை, துணிவு.

மடம்படு கொள்கை: மடமை நிறைந்த மூடக் கொள்கைகள். மக்களை நால்வேறு பிரிவினராக்கி அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வைக் கற்பித்ததும், மெய்ப்பொருள் கொள்கைக்கு மாறாக, அவற்றிற்குக் காவலாகச் சிறுதெய்வங்களைக் கற்பித்ததும், அவை தழுவிய ஆரவாரத் திருவிழாக்களை எடுப்பித்ததும், மக்களை மேலும் மேலும் மடமையில் ஆழ்த்தும் பகுத்தறிவுக் கொவ்வாத கருத்துகளைப் பரப்புவதும் மடம்படு கொள்கையாம். இவற்றைப் பெரும்பாலும் ஆரியர்கள் தமிழர்களின் மேம்பாட்டைச் சீரழிப்பதற்காகப் பயன் படுத்தினர். அவற்றை அண்ணாத்துரையவர்கள் மிகுவாகக் கடிந்து தடுத்து நிறுத்தினர்.

மறித்து உயிர்ப்பு அடக்கி: அவற்றைத் தடுத்து நிறுத்தி அவை மேலும் மேலும் கிளராவண்ணம் அவற்றின் மூலக்கரணியங் களை எடுத்து விளக்கி, அவற்றின் பொய்ம்மையை நிலைநாட்டி அவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை யிட்டார். உயிர்ப்பு அடக்குதல்–உயிரற்றுப் போகும்படி செய்தல்.

உடம்பட நிறுத்திய விறல்: மூடநம்பிக்கை நிரம்பிய கொள்கையைத் தடுத்துத் தன் கொள்கைக்கு உடன்பட்டுப் போமாறு மக்களைக் கொண்டு நிறுத்திய பெருமை.

விறல்: வெற்றி, பெருமை.

புறம் பொய்த்து – வெளிப்படையாகவே பொய் சொல்லி மக்களை ஏமாற்றி.

புல்லியர் விதிர: புன்மையாளர் நடுக்கமுற.

அறம் பெறத் தூக்கிய அரசு: அறத்திற்கு வழிவகுக்குமாறு நிறுத்திய அரசமைப்பு. மடம்படு கொள்கைகள் மறவுணர்வு சான்றவாகையால், அவற்றைத் தடுத்து அறம் பெறுமாறு அரசமைத்தார் என்றவாறு.

தற்சார் புற்ற: தன்னைச் சார்ந்து ஒழுகும். தன் கொள்கையை ஏற்று நடக்கும்.

இளையோர்: இளைஞர், தம்பியர். இவர் கட்சியைச் சார்ந்தவர் அனைவரும் அண்ணாத்துரையவர்களை அண்ணா, அண்ணா, என்று உடன் பிறப்புணர்வுடன் அழைக்கின்ற தன்மையை நோக்கின் அவரைப் பின்பற்றுபவர் அவரின் இளையோராகத் தம்மைக் கருதிக் கொள்பவரே என்க.

சொற்சோர்வு; சொல் தளர்வு.

வினைவலி: செயல் வலிமை

தோலாதிடுக: தோல்வியின்றி இலங்குக!

தோள்: முயற்சிக்காக வந்த ஆகுபெயர்.

கானிலை கொள்ளுக: அடிப்படை அசைவிலாது நிலையாக நிற்க.

செந்தமிழ்க் கழல்; செந்தமிழின் வெற்றி. தமிழ்மொழிக்கும் தமிழ்ப்பேசும் இனத்திற்கும் ஒரு தடை நீக்கம், செய்து பழம் பெருமையை மீண்டும் கால்கொளச் செய்தது இவர் கழகமாகலின் இவர் தம் வெற்றி செந்தமிழின் வெற்றி எனலாயிற்று.

இது, பாடாண்திணையும், இயன்மொழி என்துறையுமாம்.


# 'தென்மொழி'

## கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம்: | 9 உருபா. | 10-50உருபா | 14உருபா |
| அரையாண்டுக்கட்டணம்: | 5உருபா | 6 உருபா. | 7-50 |
| தனியிதழ்: | 75காசு | 90 காசு | 1-10 |

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

# தமிழரின் தனித் தன்மை பற்றி அறிஞர் ஆசர்

பி. இராமநாதன் க. இ. ச. இ.
வழக்குரைஞர்

தென்மொழி சுவடி 11, ஓலை1 (சூலை–ஆக 1973)-இல் 17–18 ஆம்–பக்கங்களில் வெளிவந்த செய்தியில் குறிப்பிடப்பட்ட அறிஞர் பெயர் பர். ஆசர். (Dr R. E. Asher) என்பதேயாகும். "hazard" என்பது வினைச்சொல் "Asher hazards என்றால்" ஆசர் (ஒரு புதுமையான கருத்தைத் துணிந்து) முன்வைக்கிறார் என்பதே பொருள். இந்தியன் எக்சுபிரசுச் செய்தித்தாளுக்கு ஆசர் கருத்து உடன்பாடின்மையால் அத்தகைய தலைப்பை அது தந்துள்ளது.) இலண்டனிலுள்ள "இந்தியா பாக்கித்தான் திருவிலங்கை நாடுகளைப்பற்றிய அரைய ஆய்வுக்கழகம்" (Royal Society for India, Pakistan and ceylon) நடத்திவரும் முத்திங்கள் (quarterly) இதழ் ஆசிய "South Asian Review"-வின் 6–ஆம் மடலம் 1- ஆம் இதழின் (அக்டோபர் 1972) 33–42ஆம் பக்கங்களில் வெளிவந்த " Dravidian separateness: Invention or reality" என்னும் கட்டுரையின் கருத்துகளே அச்செய்தியிற் கூறப்பட்ட வையாகும்.

2. அச்செய்தியிற் கூறியவைபோக அக்கட்டுரையிற் கண்ட வேறு சில கருத்துகளும் ஆசரின் நேரிய ஆய்வுத் திறனை விளக்குபவை யாகும். அவை வருமாறு:

3. தமிழின், தமிழரின் தனித்தன்மை பற்றி முன்னுள் அறிஞர்கள் கூறியவற்றையும் கட்டுரையாளர் நினைவூட்டுகிறார். திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் உரை வரைந்த பிரான்சிசு ஒயிட் எல்லிசு (Francis Whyte Ellis) 1804-ஆம் ஆண்டை ஒட்டியே இக்கருத்தை வெளியிட்டு விட்டார். பின்னர் 1856–இல் வெளியிடப் பட்ட "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்"தில் இராபர்ட் கால்டுவெல் இதனை மீண்டும் நன்கு வலியுறுத்தினார்.

4. ஆரியப் பார்ப்பனரின் நடுநிலை தவறிய ஆய்வுகளை ஆசர் தெளிவாக அக்கட்டுரையில் மறுக்கிறார். எசு. கே. கிருட்டிணசுவாமி (ஐயங்கார்) 1923–இல் கல்கத்தாப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்ட "இந்தியப் பண்பாட்டிற்குத் தென் இந்தியா

உதவியவை" (Some Contributions of South India to Indian Culture மொத்தப் பக்கங்கள் 38+428) என்னும் நூலின் ஆரியச் சார்பான– பார்ப்பனச் சார்பான கருத்துகள் முறைகேடானவை என ஆசர் கண்டிக்கிறார். "unjustifiably Pro-Aryan and Pro Brahman bias" (மேற்குறித்த கட்டுரை பக்கம் 41)

5. "திராவிடம்" என்னும் சொல்லில் இருந்து "தமிழ்" தோன்றியது என மொழியறிவில்லார் தலைகீழாகக் கூறி வருவது தெரிந்ததேயாகும். "தமிழ்" என்னும் சொல்லில் இருந்தே "திராவிடம்" தோன்றியது என்னும் மெய்யான கருத்தை ஆசர் குறிப்பிட்டுள்ளார் (பக்கம் 38).

6. எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மொழிநூல் ஆய்வாளர் (Reader in Linguistics in the University of Edinburgh) ஆகப் பணிசெய்யும் இளைஞர் ஆசர் தமிழ்ப்புதினம், தமிழ் உரைநடை ஆகிய துறைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை அவ்வப்பொழுது வெளியிட்டு வருகிறார். 1968 சனவரியில் சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் -கருத்தரங்கில் ஆசர் பெரும்பங்கு எடுத்துக் கொண்டதோடு அம்மாநாட்டின் முன் வைக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தையும் சிறந்த முறையில் தாமே பதிப்பாசிரியராக இருந்து மூன்று பெருமடலங்களில் பதிப்பித்தும் உள்ளார் ("Proceedings of the II International Conference-Seminar of Tamil Studies" Ed: R. E. Asher; முதல்மடலம். 570 பக்கங்கள் உருபா 70; இரண்டாம் மடலம்: XI; 558 பக்கங்கள் உருபா: 70; மூன்றும் மடலம் 250 பக்கங்கள் உருபா. 25, வெளியீடு: International Association of Tamil Research Thamilagam; 14/ Sterling Road; Madras-34; 1971) அப் பதிப்பாசிரியப் பணி பாராட்டத் தக்கதாகும்.


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3 00 | 4 50 | 6-00 |
| தனியிதழ் . ,, | 0 25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# செய்திகள்.

## 1. பூங்குன்றன் நீடூழி வாழி!

கடத்த 3--9--73ஆம் நாளன்று மலையக அன்பர் திரு. அ. தங்கராசன் அவர்களுக்கும் திருவாட்டி. த. சுசிலா அம்மைக்கும் ஆண் குழந்தை பிறந்து, அம்மகவுக்குப் 'பூங்குன்றன்' என்னும் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. இம்மகப்பேற்றின் நினைவாகப் பெற்றோர். உரு 35-62-ஐத் தென்மொழியின் வளர்ச்சிக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். அவர்களின் தமிழ் நெஞ்சிற்கு நன்றி கூறிச் செல்வன் பூங்குன்றன் நீடுழி வாழ வாழ்த்து கின்றோம்.

## 2. 'வேள்பாரி' நீடூழி வாழி!

பவானிசாகர் தென்மொழியன்பர் திரு. வேலரங்கன் அவர்களுக்கும் திருவாட்டி. பாப்பம்மாள் அவர்கட்கும் கடந்த மடங்கல் ச-ஆம் (20—8—73) பக்கல் ஆண் மகவு பிறந்து அம்மகவிற்கு 'வேள்பாரி' என்னும் பெயர் சூட்டப்பெற்றுள்ளது. அம்மகப்பேற்றின் நினைவாகப் பெற்றோர். உரு 5-ஐத் தென்மொழியின் வளர்ச்சிக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். அவர்களின் தமிழ் நெஞ்சிற்கு நன்றிகூறிச் செல்வன் 'வேள்பாரி' நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

## 3. 'பொய்யாமொழி' நீடுழி வாழி!

பெருவயல் தென்மொழி அன்பர் திரு. மெய். அருண் மொழியன், தமக்குக் கடந்த ஆடவை கஉஆம் பக்கல் காரிக் கிழமை யன்று பெண் குழந்தை பிறந்து 'பொய்யாமொழி' எனப் பெயர் சூட்டியதன் நினைவாக உரு. 5ஐத் தென்மொழியின் வளர்ச்சிக்கு நன்கொடையாக அளித்துள்ளார். அவரின் தமிழ் நெஞ்சிற்கு நன்றிகூறிச் செல்வி 'பொய்யாமொழி' நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

## 4. பெ. காளிமுத்து, நிர்மலாதேவி நீடுவாழி!

தென்மொழி அன்பரும் புரப்பாளருமாகிய திரு. பெ. காளி முத்து அவர்கட்கும் செல்வி. பெ. நிர்மலாதேவிக்கும் கடந்த மடங்கல் திங்கள் 10-ஆம் பக்கல் (26—8—73) வேலூர் 'இராமசாமித் திருமண மண்டபத்தில் நிகழ்ந்த திருமணத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கவும், சொற்பொழிவாற்றவும் செய்தார்கள். தனித்தமிழ்

அன்பர் பலரும் வந்திருந்து மகிழ்ந்தனர். தென்மொழியும் மணமக்கள் நீடுழி வாழ வாழ்த்துகிறது.

## 5. நா. இளமாறன், சித்திரத்தேவி - நீடுவாழி!

தென்மொழி நலனில் முழுதும் அக்கறை கொண்டவரும், விடுதலை இயக்க மறவருமான நீலமலை திரு. **நா. இளமாறன்** அவர்கட்கும் செல்வி சித்திரத்தேவிக்கும் சென்ற மடங்கல் திங்கள் 22-ஆம் பக்கல் (7 - 9 - 73) கடலூர் தென்மொழியகத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் தலைமையில் திருமணம் நிகழ்ந்தேறியது. தென்மொழிக் குடும்பத்தார் பலரும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். நந்தமிழ் இளமாறன் பன்னலமும் பெற்று இல்லத்தரசியுடன் இனிதே நெடிது வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

## 6. கோ. கலியபெருமாள், தனம் - நீடுவாழி!

கடந்த மடங்கல் திங்கள் 24-ஆம் நாள் நெய்வேலி, தொப்பை நகர் (9—9—73) 'தென்மொழி இல்லத்தில்' தென்மொழி அன்பர் திரு. **கோ. கலியபெருமாள்** அவர்கட்கும் செல்வி **தனம்** அவர் கட்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நடந்தது. பகுத்தறிவாளர்களும் அரசியல் காரர்களும், தொழிற்சழகக்காரர்களும் வந்திருந்து மகிழ்ந்தனர். மணமக்கள் நீடுவாழ 'தென்மொழி'யும் வாழ்த்துகிறது.

## 7. செல்லத்துரை, தமிழரசி - நீடுவாழி!

தென்மொழி அன்பர் திரு. **செல்லத்துரை** அவர்கட்கும், (தென்மொழியின் நலனில் அக்கறை கொண்டு அன்றும், இன்றும், என்றும் தோன்ருத் துணையாக நின்றுவரும் உண்மைத் தமிழன்பரும் விடுதலை மறவருமான திரு. **முல்லைவாணன்** அவர்கள் தங்கை) செல்வி **தமிழரசி** அவர்கட்கும் கடந்த மடங்கல் 25-ஆம் பக்கல் சீர்காழிவட்டம், கொடியம்பாளையத்தில் பாவலரேறு பெருஞ் சித்திரனுர் அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்பாக நிகழ்ந் தேறியது. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிறரும் வாழ்த்துரை வழங்கினர். தென்மொழி மணமக்களைச் செந்தமிழ்மொழி இன நாட்டிற்குத்தொண்டாற்றிச் சிறந்து வாழ வாழ்த்துகிறது.

## 8. சத்தியமூர்த்தி, விமலா - நீடுவாழி!

கடந்த மடங்கல் திங்கள் 29-ஆம் நாள் (14—9—73) புதுவை, மணல்வெளி மணமகன் இல்லத்தில் பாவலரேறு பெருஞ் சித்திரனுர் அவர்கள் தலைமையில் தென் மொழி அன்பர் திரு. **சத்தியமூர்த்திக்கும்** செல்வி **விமலாவிற்கும்** திருமணம் சிறப்பாக நிகழ்ந்தேறியது. மற்றும் பலரும் வந்திருந்து வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர். தென்மொழியும் மணமக்கள் நீடுவாழ உளமார வாழ்த்துகிறது.

# தோழனுக்கு...

—இரணியன்

என் தோழனே!

உன்றன் உரிமையை நீ எடுத் துக்கொள்;
உனக்கதை எவரும் தரமாட்டார்!
உன்றன் தளைகளை நீ உடைத் துக்கொள்;
ஒருவரும் துணைசெய வரமாட்டார்!

உரிமை என்பது மாந்தனுக் குயிர்ப்(பு);அதை
இழந்தவ னுவது கடுங்குற்றம்!
உரிமை இலாதவன் மாந்தன் அலன்;அவன்
உலவிடும் பிணம்;வெறும் சதைப்பிண்டம்!

உலகின் படைப்புகள் மாந்தர்க் கெலாம் பொது!
ஒருசிலர் துய்ப்பது பெருங்கொடுமை!
உலவிடும் கொலைஞரைக் கண்டும் பொறுப்பதோ
உரைக்கவும் கூசும் பெரும்இழிமை!

பகைவரை எதிர்க்குமுன் நண்பரைக் கூட்டு!
பாதையைச் செவ்விதின் அமைத்துக்கொள்!
தகும்தெளி வொளியை நெஞ்சினில் ஏற்று!
தாய்நில விடுதலை கருத்திற்கொள்!

ஒருவனென் றெண்ணிச் சோம்பி இராதே!
ஓரா யிரம்படை காத்திருக்கும்!
உறுதுணி வுளத்தினில் இருந்திடின் வெற்றி
உனையுடன் தேடி ஓடிவரும்!

வருமொரு காலம் எனநினை யாதே!
வரவழை அதனை இந்நொடியே!
கருமுகில் போலும் மின்னிடி யோடு
காலப் புரட்சி தொடங்கிடவே!


புதிய பொலிவுடன் கிழமையிதழாக வெளி வருகிறது!

## இளந்தமிழன்

ஆசிரியர்: பாவலர். நாரா-நாச்சியப்பன்.

விலை: 25 காசு. ஆண்டுக்கட்டணம். 12—00

தொடர்புக்கு: இளந்தமிழன்—சென்னை-14.

# திரு. வி. க. மலர்த்தேர்ச்சி முடிவு.

திரு. வி. க. மலருக்கு மாநில அளவில் எழுத்தோவியங்கள் வேண்டியிருந்தோம். பாலுணர்ச்சிக் கருவல்லாத உண்மை வாழ்க்கை யின் படப்பிடிப்பான **கதையும்**, திரு.வி.க வின் வாழ்க்கை நிகழ்ச்சியை விரித்துரைக்கும் ஓரியல் நாடகமும் ஒவ்வொன்றே வந்தன. அவையும் செவ்வையில. திரு.வி.க. நூலில் தோய்ந்த உளத்தோடு எழுதவேண்டிய 'எதிர்கால ஞாலத்தின் முதிர் கோலம்' என்னும் சாயற்கட்டுரையோ ஆய்ந்த உளத்தோடு எழுதவேண்டிய வக்கணைக் கட்டுரையோ வரவேயில்லை. 'உளங் குமுறுகின்றேன்' 'இயற்கை இன்பம்' என்னும் இரு தலைப்பில் பாடல் இருபதே வந்தன.

தமிழகத்தின் எழுத்துலக இற்றைநிலை ஈதென்றிடுவோம். எதிர் வரும் தலைமுறையினரும் இத்தன்மையரோ என நினைந்தலமருகின் றோம்.

பாடல்களைத் தென்மொழியாசிரியர் பாவலரேறு பெருஞ் சித்திரனார் பல்வேறு பணிகளுக்கிடையே எடையிட்டுத் தந்துள்ளார். அவர்தம் பாட்டுத் திறத்துப் படிக்கல்லுக்கு இந் நாட்டில் இப்போதில் எதிர்க்கல் இன்மையறிந்து அவர்தம் முடிவுப் படியே பரிசு வரிசையை அறிவிக்கின்றோம்.

முதற்பரிசு: 'உளங்குமுறுகின்றேன்'-புலவர். செய ராமன். (மறைமலையடிகள் நூல்தொகுதி) தொட்டியம் தென் னார்க்காடு மா.வ.

இரண்டாம் பரிசு: 'இயற்கை இன்பம்' - த. அன்பழகன், கடலூர். (பாவேந்தன் நூல்தொகுதி)

மூன்றும் பரிசு: 'உளங்குமுறுகின்றேன்' புலவர். அமுதன்.(பாவாணர் நூல்தொகுதி) ஆண்டாள்பந்தி தஞ்சை மாவ.

இம் மூவர்க்கும் பாராட்டும், பங்குற்ற பிறர்க்கு எம் வாழ்த்தும் உரிய. மூவர் பாடலும் திரு.வி.க. உருவமைப்பு நாள் மலரில் இடம் பெறும்.

இயற்றமிழ்ப் பயிற்றகம் திருவாரூர்.

---

## ஆசிரியரின் மலைநாட்டுச் செலவு!

'தென்மொழி' ஆசிரியர் பெருஞ்சித்திரனார் வரும் திசம்பர் இறுதியில் மலையா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுச்செலவு மேற்கொள்ள விருக்கின்றார்கள். எனவே, ஆங்குள்ள அன்பர்கள் ஆசிரியரின் நிகழ்ச்சிகள் ஏற்பாட்டிற்கு முன் கூட்டியே தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

—அமைச்சர், தென்மொழி.



# மக்களவை

## ம: 183: சிலப்பதிகாரத்தில் ஒரு பிழைப்பதிகாரமா?

குமுதம் 17—5—73 இதழில் "புகார் விழாவில் ஒரு புகார்' என்ற தலைப்பில் திரு. இராமனுதன் என்பவர் கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் பூம்புகாரிலிருந்து மதுரை வரும்போது நடந்துதான் வந்தார்கள். படகில் எங்கே சென்றார்கள்.? ஆகவே இந்திரவிழாவின் போது வைத்த ஓவியம் கருத்துப்பிழையானதே என்றார். அதுபற்றி யான் மறுத்துக் கூறிய அடிப்படைகளைக் கீழே காணலாம்.

1) கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் காவிரியின் வடகரை வழியாக நடந்து வந்து, உறையூர் அருகில் வந்தவுடன் காவிரியில் வடகரையிலிருந்து தென்கரைக்கு வருவதற்குப் படகில் தான் சென்றார்கள் என்பதை,

காரணி பூம்பொழில் காவிரிப்பேர் யாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும்
தீதுதீர் நியமத் தென்கரை யெய்தி

(சிலம்பு-10. நாடுகாண்காதை அடி 1479. 82) என்பதால் அறியலாம்.

2 கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் உறையூரிலிருந்து மதுரைவரை நடந்து வந்து, மதுரையருகில் வந்தவுடன் மதுரை நகரையடைய வையை யாற்றைத் தாண்டுவதற்கு வடகரையிலிருந்து தென்கரையடைய படகில் சென்றார்கள் என்பதை,

பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்
அரிமுக அம்பியும் அருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கில் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி,
தேமலர் நறும்பொழில் தென்கரை யெய்தி,

சிலம்பு-11. புறஞ்சேரியிறுத்த காதை-அடி 2092-96. என்பதால் அறியலாம்.

3) ஆகவே கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளும் காவிரியைக் கடக்க மாடங்களோடு கூடிய படகிலும், வையை யாற்றைக்கடக்க அழகான பல விலங்கு முகங்களோடு கூடிய படகுகளில் ஒன்ருகிய மரப்புணையிலும் ஏறி வந்தார்கள் என்பதை மேலே கண்ட சிலப்பதிகாரச் செய்யுள் அடிகளால் அறிகிறோம்.

4) அண்மையில் பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழாவில் வைக்கப்பட்ட ஓவியம் கருத்துச் செறிவுடையதே அன்றிப் பிழையுடையது அன்று என்பதை அறியலாம்.

புலவர். வ. ச. வடிவேல் முருகன், வேடசந்தூர்.

## ம 184: பேராசிரியர் அ. ச. ஞா. வுக்கு ஒரு மடல்-!

பாவலர் ஐயா அவர்கட்குத் தலைதாழ்ந்த வணக்கம். இந்த மடலை பேரா. அ. ச. ஞானசம்பத்தம் அவர்கட்கு அனுப்ப எழுதினேன். அவர்தம் முகவரி தெரியாமையால் தங்கட்கு அனுப்பியுள்ளேன். அருள்கூர்ந்து இம்மடலை அவருக்கு அனுப்ப வேண்டுகிறேன். இயன்ருல் தென்மொழியிலும் வெளியிட வேண்டுகிறேன்.

ப. இராமசாமி, உறந்தைராயன் குடிக்காடு.

பேராசிரியர் திரு. அ. ச. ஞா. அவர்கட்கு, வணக்கம். திருவுடைப்பெரியீர். தங்களைப்போன்ற பேரறிஞர்களின் கருத்துரைகளைக் கேட்பதில் யான் பெரிதும் விருப்பமுடையேன். 18—9—73 அன்று தங்களின் பட்டிமன்றத் தலைமையுரையை வானொலியில் கேட்டேன். தங்களைப்போன்ற அறிஞர்களால் தமிழ் புத்துயிர் பெற்று மிளிர்கின்றது. இருப்பினும் இராமாயணம் போன்ற பழைய 'புராணங்களை' ஆராய்ந்து கொண்டு காலத்தை வீணுக்குவதை விடுத்து, தமிழின் தொல்புகழ் கருத்துக் கருவூலங்களை வெளிக் கொணர்ந்து தாங்களும் தமிழால் உயருவதோடு தமிழையும் வாழ்விக்கத் தாங்கள் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டுகிறேன். மேலும் தங்கள் பொழிவில் பெரும்பாலும் வடசொல் கலந்தே பேசுகிறீர்கள். ராஜ்ஜியம், நீதி, சந்தோஷம், மற்றும் பிறமொழிச் சொற்களைக் கலவாது தூயதமிழில் பேசி என்போன்ற தமிழறிவே இல்லாதவர்கட்கு வழிகாட்ட வேண்டுகிறேன்.

ப. இராமசாமி,
உறந்தைராயன் குடிக்காடு.

## ம: 185: நான் ஏன் வெட்கப்பட வேண்டும்?

பெருமைக்குரிய பாவல!

சென்ற திங்கள் என் நண்பரும், நானும் திருவையாற்றுக் கோவிலுக்கு, வழிபாட்டிற்குச் சென்றிருந்தோம். (என் நண்பர் வானூர்தி நிலையம் ஒன்றில் வானிலை ஆய்வராகப் பணி செய்பவர்.) அக்கோவிலில் உள்ள இறைவனின் பெயரை அவர் கேட்டபோது "ஐயாறப்பர்" என்று நான் தமிழில் கூறினேன். உடனே அவர் தாம் அப்பெயரைக் கேட்கவில்லை எனவும், கருவறைக்குள் இருக்கும் இறைவனின் பெயரைக் கேட்டதாகக் கூறிக்கொண்டிருக்கும் போதே நாங்கள் கருவறையை நெருங்கினோம். அங்குப் "பஞ்சகதீஸ்வரர்" என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு, முகமலர்ந்து "இதோ, இந்தப் பெயரைத்தான் கேட்டேன்" என்றார். நான் தமிழில் கூறியபோது (அந்தத் தமிழருக்கு) விளங்காத அப்பெயர், வடமொழியில் கண்டதும் உடனே விளங்கியது. "பஞ்சகதீஸ்வரர்" என்ற பெயரில் "ஈசுவரன்" என்ற சொல்லின் பொருள் மட்டுமே தமக்கு விளங்குகிறது என்றும் (தாம் ஒரு தமிழராயிருந்தும்கூட) தமக்குப் போதுமான அளவு தமிழ் அறிவு இல்லாமைக்காகத் தாம் வருந்தவோ, வெட்கப்படவோ இல்லை என்றும், அதற்கான கரணியங்களை யும் அவர் கூறினார். மேலும் அவர், "மேலைநாடுகளில் ஒருவன் பள்ளி இறுதி வகுப்பை முடித்து வெளி வரும்போது, தன்னுடைய தாய் மொழியில் (வேற்று மொழிக் கலப்பற்று) நன்கு பேசவும், பிழையற எழுதவும் நன்றாகப் பயிற்றப் பெற்று வெளி வருவான். ஆனால் நம் தமிழ் நாட்டிலோ, நம் தாய்மொழியைத் தூய்மையாகக் கற்பிக்க நம் தமிழாசிரியர்கள் தவறிவிடுகிறார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில், சென்ற ஆண்டிற்கான புகுமுக வகுப்புத் தமிழ்ப்பொத்தகத்தில் ஒரு பாடத்தைப் படிக்க நேர்ந்தது. அதைப் படிக்கும் போது வடமொழி யில் எழுதப்பட்ட பாடம் ஒன்றைப் படிப்பதுபோல்தான் தோன்றியதே தவிர, தமிழ் மாணவர்கள் பயிலும் தமிழ்ப்பாடமாகத் தோன்றவில்லை. ஏனெனில், ஏறத்தாழப் பாதிக்குமேல் அதில் வட சொற்கள் கலந்துள்ளன. தமிழ்ப்பாடம் நடத்தும் தமிழாசிரியர்களும், கல்லூரிகளில் ஆயிரமாயிரமாகச் சம்பளம் பெற்றுக் கொண்டு, ஆங்கி லேயர்கள் போன்று உடையுடுத்துப் பகட்டாகத்திரியும் தமிழ்ப் பேராசிரியர்களும் இத்தகைய பாடமுறைகளை எதிர்த்து ஏன் போரிடக் கூடாது? உண்மையான மொழிப் பற்றும், கடமையுணர்வும்

கொண்டு, தமிழின் பெயரால் தாங்கள் வாங்கும் சம்பளத்திற்கு ஏற்ற அளவாயினும் இவர்கள் பணியாற்ற வேண்டுமன்றோ? சிறுசிறு கோரிக்கைகட்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்யும் இவ் வாசிரியர்களும், பேராசிரியர்களும், இது போன்ற பாடமுறைகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால் என்ன? "பஞ்சகதீஸ்வரர்" என்னும் பெயரை "ஐயாறப்பர்" என்று உடனடியாக விளங்கிக் கொள்ள முடியாத குறறம் என்னுடையதன்று; பிறமொழிக் கலப்பற்ற தமிழைப் பயிற்றுவிக்காத பள்ளித் தமிழாசிரியர்களும், வடமொழிக் கலப்பான பாடங்களைக் கண்ட பின்னரும், வெட்கமின்றி, அப்பாடங்களைப் பயிற்றுவிக்க முன் வரும் கல்லூரித் "தமிழ்ப்" பேராசியர்களும், தமிழர்கள் என்பதால், இக்கால அரசினரின் கொள்கைப் போக்குக் கேற்ப மிகவும் எளிதாக, பென்னம் பெரிய பதவிகள் பெற்று, இன்னியங்கிகளில், மொழிப் பற்றுச் சிறிது மற்று ஊர்வலம் வந்து திரியும் தமிழர்களும் இன்னும் நம் தமிழ் நாட்டில் இருக்கும் போது, இப்படிப்பட்ட தகுதிகள் ஏதுமற்ற நான் ஏன் வெட்கப்பட வேண்டும்" என்றார்.

நீண்ட உரையாடலின் ஒரு பகுதியின் சுருக்கமே இது. முழுவதும் கூறிடின் இம்மடல் இன்னும் நீளும். இக்காலத்தமிழாசிரியர்களும், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களும், "தமிழர்" என்னும் இன உணர்விஞல், (தற்கால அரசினரின் கொள்கைக் கேற்ப) சலுகைகள் பெற்று மொழிப பற்றற்றுத்திரியும் தமிழர்களும் உணர்வு கொள்ள வேண்டியே இம்மடல் எழுத நேர்ந்தது.

—இறைமகிழ்நன்-தஞ்சாவூர்.

## மட: 186: எல்லாரும் எங்கும்பாட இசைப் பாடல்கள் தாருங்கள்!

தகைமைசால் தென்மொழிச் செல்வ, வணக்கம். தங்களின் தென் (என்)மொழித்தொண்டு வளரவும் சிறக்கவும் உளமார வாழ்த்துகிறேன். தமிழ மக்களின் விடுதலை வேட்கையை மதுரை மாநாட்டிற் கலந்து கொள்வதன் மூலம் தமிழ்ப் பகைவர்க்குக் காட்டுதற்கான வாய்ப்பினை இழந்து விட்டமைக்காக மிக வருந்துகிறேன். இதற்காகத் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம் நாட்டின் விடுதலையை விரைவு படுத்துவதற்கு இப்போது நாம் மேற் கொண்டிருக்கும் செயல் முறைகளோடு இன்னும் மேற் கொள்ள வேண்டியன பல வுள என நான் நினைக்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் தன்மான இயக்கம் தொடங்கிய நாளில் அவ்வியக்கம் மக்களிடையே பரவவும் உள்ளத்தே பதியவும் பேருதவியளித்தவை இசைப்பாடல்கள், நாட்டுப்பாடல், திரைப்படப்பாடல்கள் இசைகளில் தன்மான இயக்கக் கருத்துகள் பாடப்பட்டன. சிறுவர்களும் இளைஞர்களும், பெரியோரும்கூட இசையில் நெளியும் தன்மானக் கருத்துகளை வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொள்வார்கள். அன்று தன்மான இயக்கம் வளர்ந்த வழியை இன்று நாமும் மேற்கொள்ளலாம் என எனக்குத் தோன்றுவதால் இதனைத் தங்களுக்கு நினைவூட்டலானேன்.

நல்ல நாட்டுப்பாடல் இசைகளிலும், திரைப்படப்பாடல் இசைகளிலும், தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்த்தொண்டர், தமிழர் தலைவர் கருத்தும் பணியும், தமிழ்நாட்டு விடுதலை வேட்கையைத் தூண்டும் பாடல்கள், நம் கொள்கை விளக்கம், தமிழின் தனித் தன்மையும் தூய்மையும், நாம் இந்தியரெனப்படுதலின் இழிவும், இணைந்து வாழ்தலின் அழிவும் என்பன போன்ற கருத்துகளைப் பாடல்களாக வடித்துத் தென்மொழி, தீச்சுடர், வலம்புரி, தமிழம் முதலிய தாளிகைகள் வழிப் பரப்புதல் வேண்டும்.

மேலும் வில்லுப்பாட்டு, கதை தழுவிய உரைநடைப் பாட்டு முதலியவற்றையும் இவ்வாறே பயன்படுத்துதல் வேண்டும். தமிழினத்தை மடமையிலாழ்த்த அயலார் மேற்கொண்ட இழிசெயல்களை நாடகங்கள் (இரணியன் அல்லது இணையற்ற வீரன் போல்) வழிப்பரப்புதல் வேண்டும். இன்னும் சொற் பயிற்சி மன்றங்கள், கொள்கை விளக்க வகுப்புகள் முதலியனவற்றை மேத் திங்கள் போன்ற விடுமுறை நாட்களில் நடத்துதல் வேண்டும். இதற்கெனப் பொருளுக்காகத் தென்மொழி வழியாக, உள்ளமுடைய நல்லாரை நாடுதல் வேண்டும். இவ்வழி முயன்றால் பட்டிதொட்டிகளிலும், சிறுகுடிச் சிற்றூர்களிலும் நம் உள்ளக் கிடக்கை–நமது கொள்கை–நமது உயர்கனவு விரைவில் பரவும் என நான் நம்புகிறேன்.

இப்போது எனதூர்ச் சுற்றுப்புறப் பகுதிகளில் நம்மைப்பற்றியும், நமது கொள்கை, திட்டம்பற்றியும் அறிந்தவர்களே இல்லை என்று கூடக் கூறலாம். என்னுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் கூட நம்மைப்பற்றி இன்னும் அறிந்திலர் என்பதனைத் துயரத்தோடு கூற வேண்டியவனாக இருக்கிறேன். இந்நிலையை விரைவில் மாற்ற வேண்டுமென்று மிகப்பணிவுடன் வேண்டுகிறேன்.

திரைப்படப் பாடல் தொகுப்புகள் போல 50 காசுகளுக்கு மிகாத விலையில் நமது கொள்கை விளக்கப்பாடல்கள் தனித் தமிழ் நாட்டு வேட்கைப்பாடல்கள் இப்பொழுதே வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

பாவலரேறாகிய தங்களின் கருத்துக் கருவூலங்களாக வெளி வரும் செய்யுட்களை நான் குறை கூறவோ சுவைக்கத் தவறவோ இல்லை. அவை நான் சுவைக்கத்தக்கவை—நான் உணரத்தக்கவை—என்போன்றாரைத் திருத்தத்தக்கவை. ஆனால் கல்லாதாரைக் களிப் பூட்டிக் கருத்துகளை ஏற்கச் செய்ய வேண்டும். அருள் கூர்ந்து அதற்கு வழி செய்யுங்கள் என வேண்டுகிறேன்.

ஒரு முறை தந்தை பெரியார் அவர்கள், 'என்று மதுரை, இராம நாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் என் கருத்துக்களை ஏற்று, என் கட்டளைக் கிணங்குகின்றனவோ அன்றே திராவிட நாடு பிரியும்' என்று கூறினார்கள். இது கூறப்பட்டு ஏறத்தாழ 28 ஆண்டுகள் இருக்கும் என நினைக்கிறேன். இன்னும் அவர் கருத்திற்கு இம்மாவட்டங்கள் வரவில்லை என்பதனை இப்பகுதியை உற்று நோக்குவார் உணரலாம். இதனை ஏனோ எழுதினேன். ஆனால் நான்பாட-என் வீட்டார் பாட என் ஊரார்-மாவட்டத்தார்-நாட்டார் பாட இசைப்பாடல்கள் தாருங்கள் எனப் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். வணக்கம்.

—தெ. சாலமோன்ராசு. மலைப்பட்டி.

## ம 137: தமிழ்த்தாளிகை இணைப்புக் குழுமம்.

அன்புடைய அய்யா அவர்களுக்கு,

இப்பொழுது அளவிறந்தவாறு கட்சிகள் மக்களை ஏமாற்றி வருகின்றன என்பதை நன்கறிவோம். எனவே தாளிகைக் குப்பைகளை மக்கள் மதிக்காமல் இருக்க நாம் உண்மை அரசியலை நிலைபெறச் செய்ய வேண்டும். அதற்காகத்தாங்கள் திருச்சியில் ஏற்பாடு செய்வது குறித்து மகிழ்ச்சி.

அத்துடன் தமிழ் இதழ்களை ஒன்றுசேர்த்துத் 'தமிழ்த்தாளிகை இணைப்புக் குழுமம்' (Tamil Publishing Corporation) அமைக்க வேண்டும்.

அதில் இன்று நம்முடன் சேர்ந்தும், சேராமலும் வெளியாகும் தமிழ் இதழ்களைத் திங்கள், திங்கள் மும்முறை, திங்கள் இருமுறை,

கிழமை, நாள் இதழ்களாக வெளிவர ஒன்றிணைந்த முறையில் செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் நாம் முழுவலிமையுடன் புளுகுத் தாளிகைகளைத் தமிழ் நாட்டில் புறங்காணச் செய்ய முடியும். தமிழ்நாட்டு விடுதலை வழியில் நாம் வீறு நடை போடவும் ஏதுவாகும். இன்று கலைஞர் ஆட்சிக்கு வரிந்து கட்டிக்கொண்டு ஊறு விளைவிக்கின்றனர். பலர் வடவர்களுக்குத் துணைபோக முனைந்து விட்டனர். தாளிகைகளும் அப்படியே செய்கின்றன.

விரைந்து நாம் செய்ய வேண்டியன உரியகாலம் வரை கலைஞர் ஆட்சிக்குத் துணை தருவதும், **நம் தாளிகைகள் இணைப்புக் குழுமத்தைச் செயலாக்குவதும்தான்** என்று எண்ணுகிறேன்.

—செ. செயராமன். பட்டணம்.

## ம: 188: குடந்தைப் பள்ளியில் பார்ப்பனர் கொட்டம்!

பெருங்கேண்மை ஐயா!

**'ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்'** நாளும் வளர்வதன்றி அமையுமாறு இல்லை. குடந்தையில் ஒரு நிகழ்ச்சி. இங்குள்ள **நகர உயர்நிலைப் பள்ளி** இப்பொழுது தமிழர் ஒருவரைத் தலைமையாசிரியராய்க் கொண்டிருந்தும் இதன் **'ஆளுங்கணம்' 'அவாள்'** வல்லாண்மையில் நடப்பதால் பள்ளியையே **'இந்து தர்ம'** த்தையும்—**'மநுதர்மத்'**யையும் ஓதுகின்ற**'வேதவித்யா'**சாலையாக்கி விட்டார்கள். இவ்வட்டுழியத்தினை இனநல உணர்வும்—பகுத்தறி வெழுச்சியும் தன்மானமும் மிக்க தமிழாசிரியர்கள் சிலர் அவ்வக்கால் கட்டுப்படுத்த முயன்றும் அங்குள்ள நிலை அவர்கள் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் அப்பாற்பட்டதாக உள்ளமையால் பயனற்றுப் போயிற்று.

இதற்கிடையில் வெள்ளிதோறும் **'வார'**வழிபாடு என்னும் பெயரால் மாணவர்களிடமிருந்து கட்டாயமாகப் பொருள்தண்டிக் கண்டவாறு கூத்தடித்து வருகின்றனர். ஒரு வெள்ளியன்று இயல்பிற்கு மாறாக அழைப்பிதழ் எல்லாம் அச்சடித்து விழாப்போல் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எப்போதும் **காஞ்சிப் பெரியவாளோ-புட்டபர்த்தி சாயிபாபாவோ எவனெவனோ 'மகான்'** என்னும் பெயரில் திரிகிறவனையெல்லாம் பள்ளிக்கழைத்துப் **'பாதபூசை'** செய்து பார்ப்பனக் கொழுப்பினைக் காட்டி வருகிறார்கள். கிழமை தோறும் வெள்ளிக்கிழமையன்று வழி

பாட்டிற்காக மாணவர்களைப் பூக்கொய்யச் செல்லுதல், படையல் கொடுக்க இலைபறிக்கச் செல்லுதல், திருவிளக்குத் துலக்குதல், படையல் செய்ய முன்னேற்பாட்டி லீடுபடுதல், கடைக்குச் செல்லுதல், வழிபாட்டு மன்றத்தைத் துப்புரவு செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுத்தவும் பாடங்களைப் புறக்கணிக்கவும் செய்கின்றனர். இவற்றைப் பலமுறை கண்டித்தும் பயன் காணாத நிலையில் எரிச்சல் அடைந்த மூன்று தமிழாசிரியர்கள் வேண்டுமென்றே நெற்றியிலே நீறு துலங்க 'சிவபூசையில் கரடி'யாகப் புகுந்திருக்கிறார்கள். அப்போது 10–ஆம் வகுப்புப் படிக்கும் ஒரு பார்ப்பன மாணவன் "இப்போது ஐயா கையில் சட்டியைத் தூக்கிக் கொடுத்தால் நன்றாயிருக்கும்!" என்று பகடி செய்திருக்கிறான். உடனே சினங்கொண்டெழுந்த தமிழமாணவர் ஓரிருவர் அவனை உதைத்துவிட்டார்கள். இவ்வளவே நிகழ்ச்சி. உடனே பார்ப்பனப் பண்டாரங்கள் ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகள் பணி செய்து வரும் தமிழாசிரியரைப் பகடிசெய்த பார்ப்பனச் சிறுவனை அப்படியே விட்டு விட்டு அடித்தமாணவர்மேல் அடுத்தடுத்து நடவடிக்கைகள் எடுத்தவாறுள்ளனர். அதுமட்டுமன்று. பார்ப்பன ஆசிரியர்கள் வழக்கம் போல் நம் 'அனுமார்' பட்டாளத்தைப் பக்கத்துணையாக்கிக் கொண்டு மாணவர்கள் விடுப்பதுபோல் அவரிடம் ஆசிரியர்க்குரிய பண்புகள் இல்லையென்றும், அவர்மீது பள்ளி நடவடிக்கை எடுக்காவிடில் வெளி ஆட்களை விட்டுத் தாங்களே நடவடிக்கை எடுத்து விடுவதாயும் மிரட்டி எச்சரித்துத் தலைமை ஆசிரியர்க்கு தட்டச்சில் ஒரு முறையீடு கொடுக்க, தலைமையாசிரியரும் அதனை நம் தமிழாசிரியர்க்கு விடுத்து விளக்கம் கேட்டுள்ளார். அவருந் தமிழராய் இருக்கின்ற காரணத்தால்தான், அவர் 'தலைமை யாசிரியரா அல்லது தமிழாசிரியர் முதல்வரா' என்று முறையீட்டில் பகடி செய்துள்ளனர்.

(அம்முறை கேட்டு முறையீடும் அதற்குரிய தமிழாசிரியர் தம் விளக்கமும் இத்துடன் இணைக்கப பெற்றுள.) பள்ளி ஆளுமையின் மேல் எடுக்கப்படும் நடவடிக்கையைப் பொறுத்துப் பார்த்து, அதன் பின் நிலைமை மீறினால் இங்கு கருஞ்சட்டைப்படை, தன் கை வரிசையைக் காட்டக் காலத்தை நோக்கிக் காத்துக்கிடக்கின்றது எனத் தொடர்புடையவர்களுக்கு எச்சரிக்கையாயும்–உண்மை நிலை விளக்கமாயும் இதனைத் 'தென்மொழி'யில் வெளியிட்டுதவப் பெரிதும் வேண்டுகின்றேன்.

—வே. மு. பொதிய வெற்பன், குடந்தை.

# உ. த. க. மாவட்ட அமைப்பாளர்க்கு அறிவிப்பு

இவ்வாண்டிறுதி வெங்காலூரில் நடைபெறவிருக்கும் சமற்கிருத வொழிப்பு மாநாட்டிற்கு நீலமலை மாவட்டம் நூறு உருபாவும், கருநாடகந் தவிர மற்ற மாவட்டங்க ளெல்லாம் தனித்தனி இருநூறு உருபாவுந் தண்டி, உ.த.க. பொருளாளர் திரு. செந்தமிழ்க்கிழார்க்கு அனுப்பிவிடுதல் வேண்டும்.

கருநாடக மாநிலம் The Lemurian Language and its Ramifications என்ற ஆங்கில நூல் வெளியீட்டிற்கு மூவாயிரம் உருபா விற்குக் குறையாது தண்டி, உ. த. க. பொருளாளர்க்கேனும் எனக்கேனும் அனுப்பிவிடுதல் வேண்டும்.

மாநாட்டுச் செலவிற்குரிய தொகையைக் கருநாடகக் கிளையினர் நளி கரு-இற்குப் பின் பொருளாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு மேற்கொண்டும வெங்காலூரில் தண்டிக் கொள்ளலாம். பொருளாள ரிடம் பணம்சேராவிடின், பல இழப்புகளும் இடர்ப்பாடுகளும் நேர்வ துடன் மாநாட்டையும் ஒத்திவைக்க நேரும். ஆதலால், மாவட்ட அமைப்பாளரெல்லாமும் தம கடமையுணர்ந்து கடைப்பிடிக்க.

ஞா. தேவநேயன்.

---

## மணமகளும் மணமகனும் தேவை!

அரசினர் கலைக் கல்லூரியில் ஆசிரியராய் இருக்கும் எனக்கும் பள்ளியிறுதி வகுப்பு முடித்துப் பணியின்றியிருக்கும் என்னுடைய தங்கைக்கும் முறையே மணமகளும் மணமகனும் தேவை.

இருவர்க்கும் தனித்தமிழ்ப்பற்றும், பகுத்தறிவுப் பற்றும் இருப் பின் நல்லது. இருவரும் எங்களைப்போல் தமையன் பணியிலும், தங்கை பணியின்றி இருப்பினும் சரியே.

மணமகன் உருபா 350க்குமேல் சம்பளம் பெறுபவராய் இருப் பின் நல்லது. கல்லூரியிலோ அல்லது உயர்நிலைப் பள்ளியிலோ ஆசிரியராய் இருப்பினும் சரியே. அல்லது பிற அலுவலகங்களில் பணியாற்றினுஞ் சரியே. இரண்டு திங்களுக்குள் தொடர்புகொள்க.

ஒப்பம் (பொ. பொன்னரசன்)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—

பொ. பொன்னரசன் க.மு., (பொ. தங்கராசன் க.மு.)
ஆங்கிலத்துறை, அரசினர் கலைக்கல்லூரி,
உடுமலைப் பேட்டை அஞ்சல்,
கோவை மாவட்டம்.

# வானொலிப் பொறியியல்

## கடலூர்-1.

RADIO ENGINEERING. —CUDDALORE-1.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்"

**நேர்முகப் பயிற்சி:—**

தமிழில் வானொலி மற்றும் கைவானொலிப் பெட்டிகளைப் புதியதாக இணைப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் (Radio Assembling and servicing) சிறந்த முறையில் நேர்முகப் பயிற்சி அளிக்கப் படுகிறது. சிறந்த ஆய்வுக் கூடம் உண்டு. பெண்களும் சேர்ந்து பயன் பெறலாம்.

| | |
|---|---|
| பயிற்சிக் காலம் | =2 மாதங்கள் |
| 2-ஆவது பயிற்சிக்குழுத் தொடக்க நாள் | =5-11-1973. |

**குறிப்பு:—**

உருபா 5/= புகவுக் கட்டணம் (Enterance Fee) நேரில் செலுத்தியோ அல்லது பணவிடை வழி அனுப்பியோ உங்கள் இடத்தை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். கட்டணம் கிடைத்ததும் பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப் படும்.

**அஞ்சல் வழிப் பயிற்சி:—**

இந்த அஞ்சல் பயிற்சியில் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு வானொலிப் பெட்டியும், வானொலிப் பெட்டியைப் பழுதுபார்ப்பதற்கு மிகவும் இன்றியமையாததான பன்மடி அளவி (Multy Meter) ஒன்றும் மற்றும் கருவிப்பெட்டியும் (Tools kit) சொந்தமாகின்றன.

விடுதி வாய்ப்புகள் உண்டு.

விளக்கங்களுக்கு நேரில் அணுகவும்; அல்லது பயிற்சி முறைகளும் நெறிமுறைகளும் பெற உருபா ஒன்று (1—00) பணவிடை செய்யவும்.

முதல்வர்
சோதி வானொலிப் பயிற்றகம்.
JOTHI RADIO INSTITUTE
(மஞ்சக்குப்பம், தண்ணீர்த் தொட்டி அருகில்)
25-பி. உப்பளவாடித் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர்-1.

வேலையில் உள்ளவர்களுக்கு 3 மாத மாலை நேர வகுப்புகள் உண்டு.

ஆகிவிடப் போவதில்லை. ஒருவன் அறிஞனா, இல்லையா என்பதை, அவன் கூறிச்சென்ற சொற்களும் உணர்த்திச் சென்ற உண்மைகளுமே உலகிற்குக் காட்டக்கூடியவை. ஒருவன் அறிஞன் அல்லது அறியாதவன் என்பதை வரலாறு மெய்ப்பித்துவிடும். கோவை–சிங்காநல்லூர்-த.வி.இ. பொதுக்கூட்ட அறிக்கையைப் பார்த்த அன்பரொருவர் – நன்கு படித்தவர், "பெருஞ்சித்திரன் எப்பொழுது பேரறிஞ ராளுஅர்?" என்று நீட்டினாராம். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிங்காநல்லூர்த் தோழர் ஒருவர் அப்பொழுது தாம் மிகவும் வருத்த முற்றதாக என்னிடம் கூறினார். எனவே இவ்வகையான போக்குகளுக்கு ஒரு தடுப்பாகத் தென்மொழி அறிக்கை வெளி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே.... சென்ற இதழில் **வீ. செ. வேலிறையன்** எழுதியுள்ள மடலின் கருத்துகளே நாங்கள் கொண்டிருந்த கருத்துகளுமாகும். தென்மொழி இதே அமைப்பில் வந்து கொண்டிருப்பதே நல்லது. ஆறு மாதங்களுக்கு ஓரிதழ்மேனி வெளிவரினும் தாழ்வில்லை.

தங்கள் மெய்யன்பு மறவா

—**இரணியன்**, நாரணவலசை.

**0: 379:** ....தங்களின் கருத்து ஏற்றுக் கொள்ள முடியாத வொன்றாகப் படுகிறது. என்னெனின் தங்களை அறிஞரென்றும், பேரறிஞரென்றும் இயம்புவது தங்களின் உயர்வைக் குறிக்குமென்றுதானே யொழிய பிறர்மனம் உழல்வதற்கு அன்று. மேலும் ஒரு துறையில் முற்றும்கற்றுத் துறைபோயவரென் றொருவரைக் குறிப்பிட்டோமெனின் பிற்கால் வேறொருவர் அவரைவிட உயர்கிறார். பரம அம்சரைவிட அறிவானந்தர் (விவேகானந்தர்) உயர்ந்தார். பாரதியைவிட அவரின் அடியார் (புரட்சிப்பாவலர்) உயர்ந்தார். பிற்கால் வேறொருவர் உயரக்கூடுமெனின் கற்பனையன்று. முற்றும் கற்றவரென்று எவரையும் கருதவும் முடியாது. மேலும் சில கூழாங் கற்களின் உளநிலைபற்றிக் கூறியுள்ளீர்கள். கூழாங்கல் குழம்புகிறதெனின் வயிரம் வருந்துவதா? என்னைப் பொறுத்த மட்டில் என் இன்றமிழ்த்தலைவனை அறிஞரென்றோ பேரறிஞரென்றோ இயம்புவதில் நானும் இன்பமடைந்து, பிறர்க்கும் இன்பம் பயக்கிறேன். என் தலைவனைப் பொறுத்த மட்டில் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற நெறியைக் கடைப்பிடிக்க உரிமையுண்டு; உணர்ச்சியுண்டு என ஐயா அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.—

**முத்து. கந்தவேள்**

பூலாம் வலசு. அரவக்குறிச்சி.

**0: 380:** அண்மையில் வெளிவந்த **"தென்மொழி"**யில் வெளியிட்டிருந்த திரு. வேலிறையன் கூறிய கருத்துகள் எவ்வளவு உண்மையானவை; இன்றியமையாதவை எனபதற்கு ஒரு நடைமுறைச்சான்று தருகின்றேன். 23–9–73 அன்று வெளிவந்த "ஆனந்த விகடனில்" 'முற்றத்துமுல்லை" என்ற அழகான தமிழ்ப் பெயரைத் தாங்கியுள்ள ஒரு சிறுகதையில் **"விருந்து'** என்னும் அழகான தமிழ்ச்சொல்லைப் புறந்தள்ளி **"பெத்தி"** என்னும் வடசொல்லை வழக்குக்குக் கொண்டுவரக் கொட்டையெழுத்துகளில் அச்சிட்டுள்ளனர். அச்சொல்லிற்குப்பக்கத்திலேயே விருந்து எனும் சொல்லை அடைப்புக்குறியிலிட்டுள்ளனர். நஞ்சு எப்படி ஆழமாக ஆனால் அழகாகப் பாய்கிறது, பார்த்தீர்களா? இதையெல்லாம் நம் சோற்றுத் தமிழர்களுக்கு எடுத்துச்சொன்னாலும் விளங்குவதில்லையே

என்செய்ய? ஆக, தென்மொழியின் அமைப்பில் மாற்றம் செய்வது என்பது தேவையற்றது. தீமையைத் தருவது. தென்னைமரம் காய் பறிக்க முடியாமல் உயரமாக இருக்கிறதென்று மரத்தைவெட்டிக் குட்டையாக்குவதில்லை. எண்ணிச் செய்க.

—சூ. நா. தமிழ்நெஞ்சன், சூலூர்.

**0: 381:** இற்றை நாள் தமிழகப் பாவலருள் தலைமைத் தனித் தமிழ்ப் பாவலரேறே! கனிந்த வணக்கங்கள்.

ஐயா! தங்களை எச்சொல் கொண்டு எவ்வகையிற் பாராட்டுவது! மொழிக்கும் இனத்திற்கும் தாங்கள் ஆற்றிவரும் அரும்பெரும் கடப் பாடுகளின் பயனால் தாங்கள் பெரிதும் இடர்ப்பட்டும் சற்றும் சளைக் காது முனைந்து செயலாற்றிவரும் தனித்தமிழ்ச் செயன்மறவரே! தனித்தமிழ் என்னும் சொல்லைக் கேட்குந்தொறும் நினைக்குந்தொறும் உளத்தில் கிளர்ந்தெழுவன, ஒன்று தனித்தமிழ்த் தானைத் தலைவர் மொழி மூதறிஞர் ஐயா பாவாணர் அவர்களதும், மற்று, படையின் மறவரேறெனத் திகழும் தங்களைப் பற்றியதுமான உணர்வுக் கூறுகளேயாம்! இக்கால் தாங்கள் எழுதிவரும் "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்" அவர்களின் முதுகுத் தண்டையுடைத்து முடங்கச் செய்யாவோ? இதுபோன்ற கட்டுரைகளை எழுத தமிழ்நிலத்தே வல்லார் யார்? வல்லார் இருப் பினும் இனம்-மொழி மேம்பாட்டினை நினைக்கும் நல்லார் யார்? "தமிழ் இலக்கிய வரலாற்றில்," பாவாணர் அவர்களையே மறந்துவிட்ட பண்டாரகர் மு வ. போன்றோர்களின் நிலையே இப்படி எனின் மற்றவர்களை எங்ஙன் மொழிவதாம்? ஒன்று மட்டும் உறுதி ஐயா! மொழி ஞாயிறு பாவாணர் அவர்களையே தெரியாத அறியாத பண்டாரகர் மூ. வ. அவர்களின் இதுபோன்ற நூல்கள் எமக்கும் தெரியாதனவாக அறியாதனவாகவே போகட்டும்! அறிந்த வர்களும் அவர்களின் அறிவாண்மை சான்ற அடிவருடிகளும் கற்று விட்டுப் போகட்டுமே! —எல்லோன், ஈப்போ; மலையகம்.

**0: 382:** பைந்தமிழ்ப் பாவலர் பெருந்தகைக்கு! தென்மொழி யின் முனைப்பான இயக்கங்களை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கி றேன். தென்மொழியின் திரள் தோள் மறவர்கள் கண்ட இரண்டு மாநாடுகளிலும் பங்கேற்க இயலவில்லை. காணியம் இல்லாமையே. உணர்ச்சி, உணர்வு, எழுச்சி ஆகியன இருந்தும், ஊமையாய் வாழ்ந்திட, தமிழன்னை என்னை இத்தரையில் படைத்திட்டாள். "ஏழ்மை இருக்கும் இடத்தில் எரி மலையும் இருக்கும் "என ஆன்றோர் நவில்வர். எரிமலை போன்ற உணர்ச்சி "ஓடு" என்று உந்தித் தள்ளுகிறது ஒருபுறம். "இல்லாமை என்னும் இரக்கமற்ற பேய் ஏளனம் செய்கிறது மற்றொருபுறம். இவற்றிற்கிடையே ஏங்கித் திணறுகிறேன். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற பொய்யாமொழி என் மனக்கண் முன்தோன்றி மருட்டுகிறது. அடுத்த-மாநாடு குமரியில் நடந்தாலும் சரி; கொடுமுடியில் நடந் தாலும் சரி; பாடிப்பறந்து வருவேன்!

—அரசன், மேலக்கடம்பூர்